# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| மலர் : XVII | இதழ் : 9 | டிசம்பர் 2023 | விலை. ரூ.15/– |
|---|---|---|---|
| Vol. : XVII | Issue No : 9 | DECEMBER 2023 | Price. Rs.15/ |


## சென்னையில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒ.பி.ஆர். அறக்கட்டளையின் நிவாரணப் பணிகள்




## சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிடத் திறப்பு விழா



செய்தி உள்ளே....

உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

HJ ஹரிணி ஜுவல்லர்ஸ்





தங்கநகை சேமிப்புத் திட்டத்தில்
செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVII நவம்பர் & டிசம்பர் 2023 இதழ் : 8 & 9



வெளியீட்டாளர் : V. செல்வராஜூ

கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்

இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்

துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்

சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப்பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப்பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜூ
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப்பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப்பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
K.S. பாலமுருகன், சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-8
- தென்னிந்திய ரெட்டி நலச்சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம் - 9
- ஐ.ஏ.எஸ் தேர்வு முறை - 10
- ஆடிட்டர் திரு.S.மோகன் நினைவஞ்சலி - 11
- சூடி கொடுத்த சுடர்கொடி - 12
- திருவண்ணாமலையில் தீபத்திருவிழா - 13
- மருத்துவப் பகுதி - 14
- ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை செய்தி - 15-16
- சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிட திறப்பு விழா - 17-20
- துக்கத்தில் துணை நிற்போம் - 21
- மாணவர் பகுதி - 22-23
- விவசாயப் பகுதி - 24-25
- பொதுக்கட்டுரை - 26
- ஆன்மீகப்பகுதி - 27-28
- திருமணத் தகவல்கள் - 30-33
- தபால் பெட்டி - 34






## அலுவலக முகவரி :

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# தத்தளிக்கும் சென்னை: தீர்வுதான் என்ன?

**தலையங்கம்**

"சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்... முடிவே இல்லாதது...." என்ற ஒரு பாடல் உண்டு. அதே போலதான் தமிழ் நாட்டில் வெள்ளச்சேதம் என்பது ஆண்டுதோறும் தொடர்கதையாக உள்ளது. முடிவே இல்லாத நிலையாக இருக்கிறது. இதுவரை ஒவ்வொரு ஆண்டும் பருவமழை தீவிரமடையும் நேரங்களில், வெள்ளம் ஏற்படுவதும், அதை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுப்பதும், நிதி ஒதுக்குவதும் வழக்கமான நடைமுறையாகிவிட்டது. இதுவரை அரசும், பெருநகர சென்னை மாநகராட்சியும் ஒதுக்கிய நிதி செலவிடப்பட்டிருந்தால் மழை வெள்ளப்பாதிப்பே வந்திருக்காது.

2005, 2015 ஆம் ஆண்டுகளுக்கு பிறகு சென்னை இப்போது மீண்டும் பெரும் பாதிப்பை கண்டுள்ளது. ஏற்கனவே, ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் போது, "பொதுமக்களுக்கு இயற்கை பேரிடர் தொடர்பான செய்திகளையும், எச்சரிக்கை தகவல்களையும் சரியான நேரத்தில் தெரிவிப்பதற்காக புதிய தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படும். அரசு சாரா அமைப்புகள் உட்பட சுற்றுப்புறத்தில் முதலில் உதவக்கூடியவர்களுக்கு பேரிடர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சி அளிக்கப்படும். வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கவும் வெள்ளநீர் வடிகால்களை வடிவமைக்கவும் சுற்றுச்சூழல் நகர திட்டமிடுதல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் வல்லுநர்களை உள்ளடக்கிய சென்னை பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்.

வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் 4133 இடங்கள் கண்டறியப்பட்டு உரிய நேரத்தில் தூர் வாருதல், வடிகால் அமைப்புகளை கட்டுதல், தடுப்பு சுவர்களை கட்டுதல் உள்ளிட்ட வெள்ளத்தடுப்பு செயல்பாடுகள் செயல்படுத்தப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அண்மையில் சென்னையை தாக்கிய மிக்ஜாம் புயல் பல்வேறு பகுதிகளை தீவிரமாக பாதித்துள்ளது. குறிப்பாக நீர்நிலைகளுக்கு அருகில் இருக்கக் கூடிய பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள் புகுந்த மழைநீர் 4 அடிக்கும் குறையாமல் இருந்தது. இந்த புயல் கடந்த 8 ஆண்டுகளில் சென்னை பார்க்காத அளவுக்கான அதிகனமழை கொடுத்துள்ளது. இந்த புயல் மற்ற புயல்களில் இருந்து சில காரணிகளால் வேறுபட்டுள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

புயல்கள் கரைக்கு எவ்வளவு அருகில் இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக அதன் தாக்கம் இருக்கும். மிக்ஜாம் புயல் சென்னைக்கு மிக அருகில் வெறும் 90 கி.மீ தொலைவில் வங்கக் கடலில் நிலைக் கொண்டு இருந்தது. இது கடந்த ஆண்டில் ஏற்பட்ட மாண்டஸ் மற்றும் பிற புயல்களை விட மிக நெருக்கமாக இருந்தது. பொதுவாக புயல்கள் நகர்ந்து கொண்டே இருக்கும். ஆனால் மிக்ஜாம் புயலின் போது கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் புயல் நகராமல் ஒரே பகுதியில் நிலைக்கொண்டு இருந்தது. ஏறத்தாழ 18 மணி நேரமாக சென்னைக்கு அருகில் வங்கக்கடல் பகுதியில் நிலைக்கொண்டு இருந்தது புயல். அந்த நேரத்தில் தான் அதாவது திங்கள் கிழமை அதிகாலை முதல் இரவு 9 மணி வரை விடாது மழை பெய்தது. அடுத்து புயல் நகர்ந்து செல்லும் வேகமும் மிகக்குறைவாக இருந்தது. இதன் காரணமாகவும் சென்னையில் அதிக கனமழை பெய்துள்ளது. பொதுவாக மணிக்கு 10 முதல் 18 கி.மீ வேகத்தில் செல்லும். ஆனால் மணிக்கு 7 கி.மீ வேகம் மெதுவாக சென்றது. மேலும் 5 கி.மீ வேகத்தில் கிட்டதட்ட ஸ்தம்பித்து நின்றது என்று வானிலை ஆய்வு மைய தகவல்கள் கூறுகின்றன.

வருடந்தோறும் வருண பகவான் ஐப்பசி மாதம் கண்ணைத் திறந்தாலே சென்னை வெள்ளக்காடாகி விடுகிறது. தாழ்வான பகுதிகளில் குடியிருப்போரையும் வாகன ஓட்டிகளையும் மிரட்டும் மழைநீர் வெள்ளம் வருடாந்திர வாடிக்கையாகி விட்டது. மாநிலத்தின் மக்கள்தொகை எட்டு கோடி என்கிறார்கள். அதில் சுமார் இரண்டரைக்கோடி பேர் சென்னைக்கே வந்தடைந்தால் அந்த நகரம்தான் என்ன செய்யும்.

இந்த இரண்டரைக்கோடி என்பது சென்னையில் நிரந்தரமாக வசிப்போரையும் பல்வேறு அலுவல்கள் நிமித்தமாக வந்து செல்வோரையும் உள்ளடக்கியது. இரண்டரை கோடி பேருக்கு சராசரியாக 50 கோடி லிட்டர் தண்ணீர் தேவைபடுகிறது.

வெளியேற்றப்படும் கழிவு என்றால் இந்த இரண்டரைக்கோடி பேரும் ஒரு நாளுக்கு 2 லிட்டர் சிறுநீராவது கழிக்கிறார்கள் என்றால் சென்னை முழுவதும் வீடுகளில், ஷாப்பிங் மால்களில், அலுவலகங்களில் உள்ள பல்வேறு கழிவறைக் குழாய்கள் மூலம் பாதாள சாக்கடைகளில் நிரம்பும் மனிதக் கழிவான நீர் மட்டும் 5 கோடி லிட்டர்.

இப்போதெல்லாம் வீடுகளில் செப்டிக் டேங்க் என்பது போக நேரடியாக பாதாள சாக்கடையுடன் இணையும் திட்டமும் உள்ளது. இதுபோக கழிப்பறைகளில் ஃப்ளஷ் அவுட் செய்யப்பட்டு வெளியேறும் நீர் ஒரு ஆளுக்கு 2 லிட்டர் என்றாலும் ஒரு நாளுக்கு 5 லிட்டர் அசுத்த நீர் ஃப்ளஷ் அவுட் ஆகிறது. ஆனால் சென்னையில் பாதாள சாக்கடைத் திட்ட விரிவாக்கம் மக்கள்தொகைப் பெருக்கத்துக்கும் அவர்கள் வெளியேற்றும் கழிவுநீர் அளவிற்கும் பொருத்தமானதாக இல்லை.

இது கம்ப்யூட்டர் யுகம். வீடுகளில் இருந்தே பணிபுரியும் நடைமுறைகளை பல நிறுவனங்கள் மேற்கொள்கிறது, மாநில அரசின் பல்வேறு துறைகளின் தலைமையகங்களை மட்டும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மாற்ற முடியாதா என்ன?

ஏற்கனவே 'மெட்ராஸ்' உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை இயங்குவது போல பல்வேறு துறைகளின் தலைமையகங்களையும் பல்வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லலாம். இரண்டாவது தலைநகரமாக திருச்சியை உருவாக்குவதன் மூலம் தென்கோடி மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வந்து செல்வோரின் எண்ணிக்கையை குறைக்கலாம்.

தவிர உடனடியாக வடிகால் கட்டுமானங்கள் நடைப்பெற்ற பிறகு அதில் மாற்று வேலைகள் செய்யக்கூடாது.

மேலும் மழைநீர் சேகரிப்பு கட்டாயம் பயன்படுத்தப்பட வேண்டும். இதை மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்கு ஆதரவு அளிக்கக்கூடாது.

சென்னையில் ஓடும் அடையாறு, கூவம் ஆறு, கொசஸ்தலை ஆறு உள்ளிட்டவற்றில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்பதே தீர்வாகும். இவ்விதம் சென்னையில் வெள்ளத்தை வெல்வோம்.

V. செல்வராஜ், ஆசிரியர் / வெளியீட்டாளர் 

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in

## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**த**மிழகத்தின் தலைநகர் சென்னையை தாக்கி நிலைகுலைய செய்த மிக்ஜாம் புயலின் விளைவாக டிசம்பர் 3 அன்று பெய்த கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் பெரும் பாதிப்பும், உயிர் இழப்பும், பொருள் சேதமும் ஏற்பட்டது. இந்நிலை சரி செய்யப்படுவதற்குள் தென் தமிழகத்தின் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த வரலாறு காணாத அதீத கனமழை கொட்டி தீர்த்ததால் பெரும் சேதம் ஏற்பட்டதோடு, மக்களின் வாழ்வாதாரத்தை சின்னாபின்னாமாக்கியது பெரும் வேதனைக்குரியது.

**செ**ன்னையில் வெள்ளத்தில் மாட்டிக்கொண்டு அவசர தேவைக்கு வெளியே வரமுடியாமல் தவித்தவர்களுக்கு அத்தியாவசிய தேவைகளை வழங்கி உதவிட ஒ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை முடிவெடுத்தது. மழை நின்றாலும் மக்களுக்காக சுத்தமான குடிநீர், உணவு, பால் இல்லாமல் தவித்ததை அறக்கட்டளை நிர்வாகிகள் உணர்ந்து உடனடியாக நடவடிக்கையில் இறங்கினர்.

**மி**க்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட ஜாபர்கான் பேட்டை பகுதி மக்கள் 1500 நபர்களுக்கு படகு மூலம் சென்றும் வீடு, வீடாக சென்றும் உணவு, குடிநீர், பால் பாக்கெட் உள்ளிட்ட அத்தியாவசியமான பொருட்களை வழங்கியது பாராட்டுக்குரியது.

**அ**தேபோல தென் மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்கள் அதிகன மழையால் மக்கள் பேரிழப்பை சந்தித்திருப்பது மிகுந்த மன வேதனையை ஏற் படுத்தி இருக்கிறது. இதனால் உயிர் இழந்தவர்களுக்கும், ஆடு, மாடு உள்ளிட்டவற்றை இழந்த அனை–வருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துகொள்கிறேன். மேலும் வீடுகளில் வெள்ளநீர் புகுந்ததால் வீட்டு உபயோக மின் பொருட்கள் மற்றும் இரண்டு சக்கர, மூன்று சக்கர வாகனங்கள் பெரும் பழுதடைந்திருப்பதும் வேதனைக்குரியது. இதற்கான முறையான இழப்பீடு உரியவர்களுக்கு வழங்கிட வேண்டுமென மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன். அறக்கட்டளையின் சார்பில் இம்மாவட்டங்களில் ஏறத்தாழ 35 டன் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய மளிகைப்பொருட்கள் வழங்கப்பட்டது.

**ச**மூகத்தின் அல்லல் தீர ஒ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஆற்றிய நிவாரண பணிகள் நம் சமூகத்திற்கு பெருமையை சேர்த்திருக்கும் செயலாகும்.இதற்காக ஒ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை நிர்வாகிகளுடன், துறையூர் நகர ரெட்டி நலச்சங்கம், உத்தமர் ஓமந்தூரார் பேரவை, துறையூர் ரெட்டி இளைஞர் பேரவை, விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க நிர்வாகிகள் ஒன்றிணைந்து நிவாரண பணிகளை விரைந்து செயல்படுத்தி தொய்வின்றி செய்ததற்காக நாம் அனைவரையும் நன்றியோடு பாராட்டுவோம். இதற்கு நிதி உதவி செய்த நன்கொடையாளர்கள் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள், கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ**டுத்ததாக, ரெட்டியார்கள் தம் உறவின்முறைக்கு உதவிபுரியும் சுயசார்பும் தன்னம்பிக்கையும் நம்முள் வளர்த்துக் கொள்ளவேண்டும். நம்மவர்களுக்கு முடிந்தளவு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை தரவேண்டும். இதன் மூலம் சமூகத்தின் பயன்பாடு நம்மிடமிருந்து துவங்க வேண்டும்.

**கு**டும்பத்தில் எல்லா உறுப்பினர்களுக்குள்ளும் நல்ல கருத்துப் பரிமாற்றங்கள், நாகரீகமான நடத்தை, தேவையற்ற செலவு மற்றும் ஆடம்பரத்தை தவிர்த்தல் போன்றவற்றை வளர்ப்பதன் மூலம் சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என வரும் 2024 புத்தாண்டில் சபதம் ஏற்போம்.


**வ**ரும் ஆண்டில் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய வளர்ச்சி இவைகள் குறித்து அடிக்கடி கலந்தாய்வு செய்து சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லுவதே லட்சியமாக இருக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**V. செல்வராஜ்**

# உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத்தொடர்

தொடர் – 18



ஒரு துறவி, மசோதா சட்டமாக்கப்பட கூடாது என்றும் கூறி, தம் எதிர்ப்பைத் தெரிவிக்க, சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார். ஓமந்தூரார் இதையெல்லாம் கண்டு அஞ்சவில்லை.

### மடங்கள் பற்றிய ஓமந்தூரார் கருத்து

தமது கருத்தைத்தெளிவுபடுத்த தமிழ் நாட்டு மாடதிபதிகள், கோயில் நிர்வாகிகள், அறக்கட்டளைகளை நடத்தி வருபவர்கள் போன்றவர்களின் மாநாடு கூட்டி அவர்களுடைய யோசனைகளை ஓ.பி.ஆர் கேட்டார். அப்போது முதலமைச்சர் பின்வருமாறு பேசினார்.

'நமது தெய்வக்கொள்கையின் பொதுத் தன்மையைக் கைவிட்டு, இடம் பொருள் ஏவலால் ஏற்பட்ட மூர்த்திபேதம், தர்க்கபேதம் ஆகியவற்றைப் பெரிதாகக்கருதி, அடிப்படையான பொதுக் கொள்கைகளை மறந்தொழிந்து நமக்குள் பூசல் புரிந்து சகோதரத்தன்மையை இழந்து அழிவது அழகல்ல. இதுவரைக்கும் நடத்திய சைவ வைணவப்போர்கள், வடகலை, தென்கலை விவகாரங்கள் போதும்.

'கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக'

என்று வள்ளலார் மக்களுக்குள் வேற்றுமை கற்பித்த நூல்களையும், அவற்றைப் பின்பற்றும் பேதைமையையும் குறித்து வருந்துகிறார். ஆதலால், இப்பேத புத்தி இனி ஒருகாலும் தலையெடுக்கக் கூடாதபடி, எல்லா மக்களையும் உடன்பிறந்தாரைப் போல் பாவித்து, அன்பு செலுத்துவதையே தெய்வ நம்பிக்கையின் முதற்கொள்கையாகக் கொண்டு தினசரி வாழ்க்கையில் நடந்து நாட்டில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் வளர்த்தல் வேண்டும்'. ஜீவகாருண்யமே கடவுள் கொள்கை என்பதையும் ஓமந்தூரார் வலியுறுத்தினார்.

"பழைய கோயில்கள் பலவற்றில் பொறிக்கப் பட்ட தருமங்களில் பலப்பல அகதிகளுக்கு ஆகாரம் இடுவதற்கும் அவர்கள் நோய் தீர்ப்பதற்கும் ஏற்பட்டிருக்கின்றன. கல்வித்தருமத்தைக் குறித்தவையும் பல. இந்தப்படி மக்களின் பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் கோயில் மடம் முதலியன மேற்சொன்ன மேலான தெய்வ வழிபாட்டிற்காக அதாவது பொது மக்களது பசி, பிணி, அறியாமை நீக்குவதற்காக மேலும், மேலும் பாடுபட்டு வருதல் தவிர்க்க முடியாத கடமையாகும்".

"ஜமீன்தார்களுடைய நிலங்களைக்குறித்து புதியதோர் சட்டம் நடைமுறையில் வரவிருக்கிறது. தமிழ்நாட்டு மடங்கள் பலவற்றிற்கு ஜமீன்வகை நிலங்கள் இருக்கிறதாகத் தெரிகிறது. தகவல் கிடைத்த வரையில் 5 மடங்களுக்கு இனாம் ஜமீன் வகை நிலங்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கரும், 12 கிராமங்களும் இருக்கின்றன. பயிரிடும் குடிகளின் வாழ்க்கையை மாறுதல் செய்யப்போவதால் பொதுமக்கள் நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் மடங்களும் குடிகளும் ஒன்று என்ற மனப்பான்மை வரும்படியாக மடங்கள் நடந்து கொள்ள வேண்டும். இங்ஙனம் தொழில் நஷ்டப்பட்டால் தான் மடங்களுக்கென சில சலுகைகள் காட்ட இடம் ஏற்படும்.

மடங்கள், கோயில்கள் இவை என்ன செய்ய வேண்டும் என்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

1. திக்கற்ற குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், ஏழைகளுக்கும், உண்ண உணவுக்கு உதவுவது,
2. கடவுள் கொள்கையில் சாதி, சமய, பேதமற்ற பொதுக்கருத்துக்களை நாட்டில் பரப்ப ஏற்பாடு செய்வது.
3. ஆதரவற்ற நோயாளிகளுக்கு மருத்துவம் அளிப்பது.
4. பிறப்புயர்வு பாராட்டாது ஆன்ம நேய உரிமை பாராட்டி வேறுபாடின்றி நடந்து கொள்வது.
5. இரவு பகல் உழைக்கும் ஏழை மக்களின் அறியாமையை நீக்குவதற்குப் பள்ளிக் கூடங்களை நடத்துவது.
6. அர்ச்சகரும், பட்டரும் வேதாகம வழிபாட்டு முறை களைச் சொல்பொருள் குற்றமில்லாமல் சொல்லுதல் வேண்டி, அவர்களுக்கு வேதாகமக் கல்வியை முறையாகக் கற்பிப்பது.
7. ஓதுவார்கள் பிரபந்தக்காரர்கள் முதலியோரைச் சரியான முறையில் கற்க ஏற்பாடு செய்வது.
8. நமது பெரியோர்கள் பின் விட்டுப்போன தெய்வப் பெருநூல்கள் பலப்பல நமது மடங்கள் கோவில்கள் சிலவற்றில் இன்னும் வெளிப்படுத்தாது இருக்கின்றன என்று தெரிகிறது. இவற்றை இதுகாறும் வெளியாக்காதது பெரிய குற்றம். இனியாவது தாமதமின்றி இவற்றை வெளிப்படுத்தி பக்திமான்களது ஆதரவை மடங்களும் கோயில்களும் சம்பாதித்துக் கொள்ளுதல்.
9. பொதுமக்களுக்கு நூல் நிலையங்களும் படிப்பகங் களும் நிறுவுதல்.
10. கூடியவரையில் தெய்வ நம்பிக்கை உடையவர்கள், நல்லொழுக்கமுடையவர்கள். ஜாதி சமயச் செருக்கற்றவர்கள், ஜீவகாருண்ய முடையவர்கள் ஆகியோரை மட்டும் மடம் கோயில்களில் பணிக்கு அமர்த்துதல், இவற்றை ஒட்டி இன்னொன்றும் சிறப்பாகச்சொல்ல விரும்புகிறேன். நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் அருளிச் செய்த திருவாய் மொழிகள், தேவார திருவாசகங்கள், திருப்புகழ், திருப்பாடல்கள், திருஅருட்பா முதலியவற்றுக்குச் சமமாக இந்நாட்டுப் பொதுமக்களுக்குப் பத்திமை உண்டாக்கும் வகையில் வேறெதையும் சேர்த்துச் சொல்ல முடியாது. இவற்றைச் சொற்குற்றம், பொருட்குற்றம், இசைக்குற்றங்களாகிய குற்றங்கள் இல்லாமல், தெளிவாகவும் உணர்ச்சி யோடும் பத்திமையோடும் பாட வைப்பது கோயில் நிர்வாகத்தின் தனிக்கடமை ஆகும்.

"தமிழ்நாடு செழித்தோங்க வேண்டுமானால் தமிழ்நாட்டில் மெய் உழைப்பாளிகள் சச்சரவு கொள்ளாமல் இருக்கவேண்டும். தமிழ்நாட்டில்

சமய பேதங்கடந்த தெய்வ உணர்ச்சி வளர வேண்டுமானால், தமிழ்நாட்டில் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்பது ஒழிய வேண்டுமானால், தமிழ் நாட்டில் மொழிவளம், கலை வளம் பெருக வேண்டுமானால், தமிழ்நாட்டில் எந்த ஏழைக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், படிக்கப்பள்ளிக்கூடமும் நோய் தீர்த்துக் கொள்ள மருத்துவ நிலையமும் இருக்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் "கடவுள் மறுப்பு" ஒழிய வேண்டுமானால், தமிழ்நாட்டில் எல்லா மக்களுக்கும் உடன் பிறந்தார் உணர்ச்சி நிலைபெற வேண்டுமானால் தமிழ்நாட்டில் முன் காலம் போல் பக்திமான்கள் உதிக்க வேண்டுமானால், இவை எல்லாவற்றிற்கும் நிலைக்கலன்களாக நமது மடங்களும் கோயில்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் நூறு மடங்கு விளக்கமுறல் வேண்டும்.

### கோயில்கள் மடங்களின் சொத்துக்கள்

கோயில்களுக்கும், மடங்களுக்கும் இருந்து வரும் சொத்துகள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் அவற்றால் வர வேண்டிய வருமானம் அந்த ஸ்தாபனங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றும் ஓமந்தூரார் விரும்பினார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அமைத்த ஜே.சி.குமரப்பா குழுவில் ஓமந்தூரார் உறுப்பினராய் இருந்தபோது கோயில் களுக்கும், மடங்களுக்கும் சொத்துக்கள் தேவை என்பதைச்சுட்டிக்காட்டு ஒரு குறிப்பு எழுதி யிருந்தார்.

கோயில்களுக்குப் பணம் தேவையில்லை. சொத்துக்களும் தேவையில்லை என்று 1947இல் மகாத்மா காந்தி ஹரிஜன் இதழில் எழுதியிருந்தார். அப்போது ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்தார். அந்தக் கட்டுரை வந்த சில நாட்களில் ஓமந்தூரார் தில்லிக்குச் சென்று காந்திஜியைச் சந்தித்தார்.

"கோயில்களுக்கும் மடங்களுக்கும் நிதியும் சொத்தும் கட்டாயம் தேவைப்படுகிறது. கோயில் களையும், மடங்களையும் கலைக்க நான் தயாராக இல்லை" என்று ஓமந்தூரார் காந்திஜியிடம் சற்று வேகமாகப் பேசினார்".

கொள்கை வேறுபாடு ஏற்பட்டபோது யாருடனும் மோதுவதற்கு ஓமந்தூரார் தயங்கியதில்லை.

### தஸ்திக் அலவன்ஸ்

கோயில்களின் நலம் குறித்து, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் ஓமந்தூரார் ஒரு முக்கியமான ஏற் பாட்டைச்செய்தார். அதன் விவரம் வருமாறு

"கோயில்களுக்கும் மடங்களுக்கும் ஜமீன் அல்லது இனாம் கிராமங்கள் இருந்தன. ஜமீன் ஒழிப்புச்சட்டப்படி அரசாங்கம் அவற்றை ஒப்புக் கொண்டது".

இம்மாதிரி ஒப்புக்கொண்ட கிராமங்களுக்கு, அரசாங்கம் ஒரே தொகையாக நஷ்டஈடு கொடுத்தது. கோயில்களுக்கும், மடங்களுக்கும் இவ்வாறு ஒரே தேதியில் நஷ்டஈட்டுத் தொகையை கொடுத்துவிட்டால், அந்தப் பொறுப்புக்களில் இருப்பவர்கள், அவ்வாறு அரசாங்கத்திடமிருந்து பெற்ற நஷ்டஈட்டுத்தொகையை ஏதாவது ஒரு செயலுக்குச் செலவு செய்துவிடுவார்களோ என்று ஓமந்தூரார் அஞ்சினார். ஆகையால் கோயில்களுக்கும் மடங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈடு, ஆண்டுதோறும் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் தஸ்திக் அலவன்ஸ் என்று இதற்கு பெயர் என்றும் ஜமீன் ஒழிப்புச்சட்டத்தின் 38(1) என்ற பிரிவின் கீழ்வகை செய்தார். இந்தத்தொகையை கணக்கிட சம்பந்தப்பட்ட ஜமீன் மூலமாக சட்டம் அமுலுக்கு வந்த பசலிக்கு முந்தின ஐந்து முழுப் பசலிகளில் கிடைத்த எல்லாவகையான சராசரி வருமானத் துக்கும், இரயத்துவாரிப்பட்டாவின் கீழ் அந்த நிலங்களின் மூலம், மேற்படி நிறுவனங்களுக்கு ஓர் ஆண்டில் கிடைக்கும் வருமானமும் கணக்கிடப் பட்டன.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத் தொகை 38 (2) பிரிவின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் கூடுதல் நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டது. இந்த மானியங்கள் மேற்படி நிறுவனங்கள் இருக்கும் வரை கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஓமந்தூரார் வகை செய்தார்.

### வள்ளலார் கருத்துக்கள்

ஓமந்தூராருக்கு வள்ளலாரின் கொள்கைகளில், அழுத்தமான பற்றுதல் இருந்தது. வள்ளலாரின் கொள்கைகள் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.

1. கடவுள் ஒருவரே
2. அவர் அருட்பெருஞ் ஜோதியர்
3. சிறு தெய்வ வழிபாடு கூடாது.
4. அத்தெய்வங்களின் பெயரால் உயிர்பலி கூடாது.
5. புலால் உண்ணலாகாது
6. ஜாதி சமய முதலிய வேறுபாடுகள் கூடாது.
7. எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமை பாட்டு உரிமையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
8. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.
9. புராணங்களும் சாஸ்த்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா.
10. இறந்தவரைப் புதைக்க வேண்டும், எரிக்கக் கூடாது.
11. கருமாதி, திதி முதலிய சடங்குகள் வேண்டாம்.
12. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

### பாம்புக்கு இரக்கம்

வடலூரில் தாம் நிறுவிய நிலையத்தில் பாம்பை அடிக்க கூடாது என்று ஓ.பி.ஆர் ஆணை யிட்டிருந்தார். யாராவது அடித்ததாகத்தெரிந்தால் அன்று ஓ.பி.ஆர் உணவு உண்ண மாட்டார்.

### மாடுகளின் மேல் அன்பு

சென்னையிலுள்ள கால்நடைக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துமனையில் நோய்வாய்ப்பட்ட மற்றும் காயம்பட்ட உயிரினங்களை மருத்துவமனைக்குக் கொண்டுபோக மாட்டுவண்டி பயன்படுத்தப்பட்டு வந்தது. அதற்குப்பதிலாக மோட்டார் வேனிலேயே அந்த உயிரினங்களைக்கொண்டு போக வேண்டுமென்று ஓ.பி.ஆர் முதலமைச்சராக இருந்த போது ஆணையிட்டார்.

### ஆராய்ச்சி

வள்ளலாரைப்பின்பற்றி எத்தனையோ வகைகளில் ஓ.பி.ஆர் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். சாகா நிலைப்பற்றி ஆராய்ச்சி, சமாதி வழிபாட்டு முறை, தீபஒளி பற்றி ஆராய்ச்சி, செப்புத் தகடுகளை கோமியத்துடன் கலந்து உருக்குவது முதலிய ஆரா–ய்ச்சிகளில் ஈடுபட்டார். 14 வகை இரசவாதம் குறித்தும் ஆராய்ந்தார்.

### வாயில்லாப்பூச்சிகளுக்கு ஊட்ட உணவு

பறவைகளுக்கும் கால்நடைகளுக்கும் புஷ்டியான தீவனம் வாங்க வேண்டுமென்று தனது நாள் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார்.

### நாராயண குருவும் வள்ளலாரும்

கேரளத்தில் சமுதாயப் புரட்சி செய்தவர் நாராயண குரு. அவரைப் பற்றிய நூல்களை ஓ.பி.ஆர். படித்ததோடு நாராயண குரு ஆசிரமத்துக்குச் சென்றிருந்தார். கேரளத்தில் அவருக்கு இருந்த ஆதரவு தமிழ்நாட்டில் இராமலிங்கசுவாமிக்கு இல்லையே என்று அவர் வருத்தப்பட்டார்.

வள்ளலார் பிறந்த மருதூரில் வள்ளலாருக்கு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டுமென்று விரும்பினார். ஓ.பி.ஆர். தலைமையில் ஒரு திருப் பணிக்குழு அமைக்கப்பெற்றது. கணக்குகளைச் சரிவர வைத்துக்கொள்ள ஒருவரும் முன்வராததால் ஓ.பி.ஆர் அக்குழுவிலிருந்து விலகிக்கொண்டார்.

### அருட்பாவும் இசையும்

அருட்பாவை பக்கவாத்தியமின்றிப் பாட வேண்டும் என்ற கருத்தை ஓ.பி.ஆர். வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் வற்புறுத்தினார்.

### திருச்செந்தூரில் வள்ளலார் திருவுருவம்

சுத்த சன்மார்க்கத்தைப்பரப்புவதிலும், ஆன்மநேய ஒருமைப்பாட்டை பலரும் ஏற்றுகொள்ள செய்வதிலும் ஓ.பி.ஆர் ஆர்வமாய் இருந்தார். எனவே வள்ளலார் புகழ்பரப்பும் நிகழ்ச்சிகளுக்கு யார் தன்னை அழைத்தாலும் தங்கு தடையின்றிச் சென்றார்.

முதலமைச்சர் பதவியை விட்டு அவர் விலகிய பிறகு திருச்செந்தூரில் இராமலிங்கசுவாமிகள் மடத்தில் வள்ளலார் திருவுருவமொன்று திறந்து வைக்கப்பட்டது. இலங்கை வணிகர் இராமலிங்கம் பிள்ளை என்பவர் இத்தாலியப்பளிங்கில் வள்ளலாரின் திருவுருவத்தை தம் செலவில் வடித்துப் பிரதிஷ்டை செய்தார். பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர் முதலிய பலர் இவ்விழாவில் கலந்துக்கொண்டனர். இவ்விழாவில் தான் ஓமந்தூரார் முதல் தடவையாகச் சொற்பொழிவுச் சித்தர், அருட்பா அரசு திரு.கிரிதாரிப்பிரசாத்தைத் சந்தித்தார். திரு.கிரிதாரிப்பிரசாத் செய்து வரும் பணிகளை ஓமந்தூரார் பெரிதும் பாராட்டினார். அவர் அடிக்கடி வடலூருக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

திரு.கிரிதாரிப்பிரசாத் மலேசியாவுக்குச் சுற்றுப் பயணம் செல்ல இருந்ததை ஓ.பி.ஆர். கேள்விப்பட்ட போது இராமகிருஷ்ணர் இயக்கம் போல வள்ளலார் கருத்துக்களும் உலக இயக்கமாகப் பரவ வேண்டும் என்றும் மலேசியாவில் அதற்கு அடிகோல வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக்கொண்டார்.

### வள்ளலார் பற்றிய நூல் வெளியீடுகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாவர இயல்பேராசிரியராக இருந்த டாக்டர்.சீனிவாசன் ஒரு நிகழ்ச்சியைக்குறிப்பிடுகிறார். டாக்டர். சீனிவாசன் வாயிலாகவே இதைக் கூறுவோம்.

1954ல் மலேசியாவிலுள்ள திருவருள், தவநெறி மன்றத்தினருக்காக Introduction to Philosophy of Ramalinga Swami என்ற ஆங்கிலநூலை எழுதினேன். கை–யெழுத்துப்படியை, சத்திய ஞான சபையில் வைத்து அதன் பிறகு மலேசியாவுக்கு அனுப்புவதற்காக வடலூருக்குச் சென்றேன். அப்போது ஓ.பி.ஆர் மைத்துனர் திரு.துரைசாமி ரெட்டியார் வந்திருந்தார். இதை பற்றித் தெரிந்தால் ஓ.பி.ஆர் மகிழ்ச்சியடைவார் என்றும் அவரிடம் போவோம் என்றும் சொல்லி என்னை அழைத்துச் சென்றார்.

நூல் முழுவதையும் படித்துக்காட்டச் சொன்னார். வரிவிடாமல் படித்தேன். மிகவும் பாராட்டினார். ஆங்கில நூல் எனினும், முழுவதும் நன்றாகப் புரிந்து கொண்டார்.

இதையே, "சுத்த சன்மார்க்க விளக்கம்" என்ற பெயரில் தமிழில் வெளியிடும்படி சொன்னார். அதற்கு உதவவும் முன் வந்தார். ஆனால் சில நிபந்தனைகளை குறிப்பிட்டார்.

1. என் பெயர் எந்த இடத்திலும் கூடாது.
2. என் போட்டோ அதில் இடம் பெறக்கூடாது.
3. முன்னுரை தரமாட்டேன்.

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நூலை எழுதி வெளியிட்டேன்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற நூல் வெளிவந்ததும், ஓ.பி.ஆர் அந்த நூலின் 100 படிகளை விலைக்கு வாங்கி, தக்கவர்களுக்கு அன்பளித்தார். (தகவல் ம.பொ.சி)

ஊரன் அடிகள், இராமலிங்க சுவாமிகளின் வரலாற்றை எழுத முன்வந்தபோது ஓமந்தூரார் அந்த முயற்சியை ஊக்குவித்து பொருளுதவி செய்தார்.

**இன்னும் வளரும்.......**

**தொகுத்தவர் வீ.செல்வராஜு**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து

**குறிப்பு :**

திரு.கிரிதாரி பிரசாத் தலைசிறந்த சொற்பொழிவாளர், அருட்பாவிலும் கீதையிலும் ஈடு இணையற்ற புலமையுடையவர். பன்மொழிப்புலவர். அலைக்கடலுக்குப்பால் அமெரிக்காவிலும் சென்று வள்ளலாரின் புகழைப்பரப்பி வருபவர். இவர் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே. இவருடைய அரிய நாவன்மையை தொழிலதிபர் திரு.நா.மகாலிங்கம் தக்கவாறு பயன்படுத்தி வந்தார்.

ஒரு காட்டாற்றில் நாலாவிதமான உபந்திகளும், ஒரே சமயத்தில் பெருக்கெடுத்து முட்டி மோதிக் கொண்டு, கரைபுரண்டு, வந்து சங்கமிப்பது போல வேதம், திருமறை, பைபிள், உபநிடதங்கள், இதிகாசங்கள், பிரபந்தங்கள் என்று உலகத்திலே இருக்கிற அத்தனை ஞானச்செல்வங்களும் ஒரே சமயத்தில் இவர் பேச்சில் இடம் பெறும்.

# தென்னிந்திய ரெட்டி ஜன சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம்



கடந்த 17.12.2023 அன்று கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் இலவச கண் மற்றும் பல் மருத்துவம், வாய் புற்றுநோய் தொடர்பான மாபெரும் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது.

பார்வை இழப்பு தடுப்பு சங்கம், புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை, கோரிமேடு அரசு மகாத்மா காந்தி முதுநிலை பல் மருத்துவ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கடலூர் தென்னிந்திய ரெட்டி ஜன சங்கம் இம்முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சியில் தென்னிந்திய ரெட்டி ஜன சங்க தலைவர் திரு.கே.வி.முத்துமல்லா ரெட்டியார், செயலாளர் திரு.எம்.ரவிச்சந்திரன் பொருளாளர் திரு.ரவிக்குமார், இணைச்செயலாளர் திரு.ஜெயசந்திரன், செயற்குழு உறுப்பினர்கள் திரு.கே.டி.ஆர்.எல்.ஜெயசந்திரன், திரு.அருண், திரு.கிருஷ்ணகுமார், நெமிலி திரு.ராமசந்திரன், புதுச்சேரி ஜெயராம் ஓட்டல் உரிமையாளர் திரு.ராமசந்திரன் மற்றும் குவாலிட்டி பைப்ஸ் திரு.ராமமூர்த்தி, புதுக்கடை திரு.ஞானசேகர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

முகாமில், 550 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் கண் புரை குறைபாடு உள்ள 50 பேர் அறுவை சிகிச்சைக்கு தவளக்குப்பம் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

330 பேருக்கு பல் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 10 பேருக்கு வாய்ப்புற்றுநோய் கண்டறியப்பட்டு மேல் சிகிச்சைக்கு கோரிமேடு மகாத்மா காந்தி முதுநிலை பல் மருத்துவ நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஹரித்ரா ஹரிசகசரநாம டிரஸ்டினர் தன்னார்வலர் பணியில் ஈடுபட்டனர்.



# ஐ.ஏ.எஸ் தேர்வு முறை

ஐ.ஏ.எஸ் (இந்திய நிர்வாக சேவைகள்) தேர்வில் வெற்றி பெற சென்னையில் பிரத்தியேக பயிற்சியை **கே.ஆர்.டி. ஐ.ஏ.எஸ் பயிற்சி மையம்** உங்களுக்கு இலவசமாக வழங்குகிறது. நீங்கள் உண்மையிலேயே ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆக வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இந்தக் கட்டுரையில் இச்சிறந்த UPSC கோச்சிங் இன்ஸ்டிட்யூட்டைப்பற்றி உங்களுக்கு சொல்லுகிறோம். சென்னை நகரத்தில் உள்ள இது IAS தேர்வுக்கு தயாராகும் மாணவர்களின் பயணத்திற்கு உதவும்.

இந்திய நிர்வாக சேவை (IAS), இந்திய வருவாய் சேவை (IRS), இந்திய காவல் சேவை (IPS) உள்ளிட்ட உயரிய பதவிகள் உள்ளிட்ட அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான அனைத்து நியமனங்களும் இந்தியக்குடியரசுத் தலைவரால் செய்யப்படுகின்றன.

ஐ.ஏ.எஸ் என்பது பல ஐ.ஏ.எஸ் ஆர்வலர்களின் கனவு பதவியாக அறியப்படுகிறது. ஐ.ஏ.எஸ் தேர்வு புத்தி கூர்மையை சோதிப்பது, தந்திரமானது. ஒவ்வொரு ஆண்டும் ஐ.ஏ.எஸ். தேர்வு முறை மாறிக் கொண்டே இருக்கிறது.

கே.ஆர்.டி ஐ.ஏ.எஸ் அகாடமி பயிற்சி மையம் UPSC எழுதும் விண்ணப்பதாரர்களுக்குள் உள்ள பொது அறிவை சோதனை செய்கிறது. இதனை தேர்வு எழுதுபவர்களிடம் கண்டறிந்து பயிற்சி வழங்க மையமும் கடினமாக உழைக்கிறது. இதற்கென நூலகம், ஸ்மார்ட் போர்டு கொண்ட வகுப்பறை, படிப்பறை என நல்ல உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுள்ளது. மேலும் இங்கு பயிற்சிகளுக்கான கால அட்டவணை அமைத்து சிறப்பாக செயல் படுத்தப்படுகிறது.

## ஐ.ஏ.எஸ் தேர்வு முறை :–

இதில் 3 நிலைகள் உள்ளன :

**UPSC சிவில் சர்வீஸ் பிரிலிம்ஸ் தேர்வு :** UPSC பிரிலிம்ஸில் அப்ஜெக்டிவ் வகை கேள்விகள் உள்ளன. இந்த பகுதி தாள் 2–ல் CSAT என்ற தகுதி தேர்வு மட்டுமே எழுதவேண்டும். CSAT தேர்வில் நீங்கள் 33% மதிப்பெண் பெற்றால் போதும். அதை முறியடிக்க CSAT IAS தேர்வுக்கு தயார்படுத்துவதற்கான உத்திகளை பின்பற்றவும்.

ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆவதற்கான **2வது கட்டம் மெயின்ஸ் தேர்வில் தேர்ச்சி பெறுவது.** இது முழு நீளத் தேர்வு / சப்ஜெக்டிவ் பேப்பர். இதில் மொத்தம் 9 தாள்கள் உள்ளன.

**ஐ.ஏ.எஸ் நேர்காணல் / ஆளுமைத் தேர்வில் தேர்ச்சி பெறுவது 3வது நிலை.**

**அனுமதிக்கப்பட்ட வாய்ப்புகளின் எண்ணிக்கை**

| பிரிவு | வாய்ப்புகள் |
|---|---|
| பொது | 6 |
| OBC | 9 |
| SC/ST | Unlimited |
| உடல் ஊனமுற்றோர் | 9 |

**முக்கியமான குறிப்பு**

முதல் நிலைத் தேர்வில் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் ஒரு வாய்ப்பாகவே கருதப் படுகிறது.

மாணவர்கள் தனது மெயின் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும் நேர்காணலில் தோல்வியுற்றாலும் ஒரு வாய்ப்பாக கருதப்படுகிறது.

**UPSC தேர்வுக்கு தயாராவது எப்படி?**

1. ஐ.ஏ.எஸ், யு.பி.எஸ்.சி. சி.எஸ்.இ தேர்வுகளுக்கு கற்பிக்கும் உரிய நிபுணர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுங்கள். நீங்கள் சொந்தமாக ஐ.ஏ.எஸ் தேர்வுக்குத் தயாராகலாம். ஆனால் யு.பி.எஸ்.சி தேர்வில் தேர்ச்சி பெற நீங்கள் ஐ.ஏ.எஸ் பாடப்பகுதிகளைப் பற்றி முழுமையான அறிவைப் பெற்றிருக்கவேண்டும்.

பாதி அறிவு சிவில் சர்வீசஸ் தேர்வுக்கு தயாராவதற்கு பேரழிவை ஏற்படுத்தும்.

2. UPSC CSE-ல் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற
   - சரியான புத்தகங்களைப்படித்தல்
   - செய்தித் தாள்களைப்படித்தல்
   - IAS பயிற்சி பற்றிய கையேடுகளைப் பின்பற்ற வேண்டும்.
3. UPSCயின் மிக முக்கியமான புத்தகங்களுக்குத் தயாராக, பண்டைய & இடைக்கால வரலாறு, லட்சுமிகாந்த், NCERT புத்தகங்கள், புவியியல், அடிப்படை வரைபடங்கள் போன்றவற்றைப் படிக்கவும்.
4. ஐ.ஏ.எஸ் தேர்வு தயாராவதற்கு அர்ப்பணிப்பு தேவை.

**KRT IAS அகாடமியின் சிறப்பு அம்சங்கள் :**

- நேரடி ஆஃப்லைன் வகுப்புகள்
- சமீபத்திய UPSC புதுப் பாடப்பிரிவுகள்
- IASக்கான ஆழமான மற்றும் விரிவான படிப்புப் பொருட்கள்
- அனுபவம் வாய்ந்த கல்வி ஆலோசகர்களிடமிருந்து வழிகாட்டுதல்கள்
- மேம்படுத்தப்பட்ட மாதிரி தேர்வுத் தாள்கள்
- இன்றைய நடப்பு நிகழ்வுகள்

**ஐ.ஏ.எஸ்.க்குத் தயாராவதற்கான உத்திகள்**

- நடப்பு நிகழ்வுகள் வகுப்புகள்
- ஐ.ஏ.எஸ். தேர்வுக்குத் தயாராவதற்கான நுணுக்கங்கள்
- சந்தேகங்களைத் தீர்க்கும் அமர்வுகள்
- ஆஃப்லைன் வகுப்பறை வசதி
- இலவச விரிவுரைகள்
- செய்தித்தாள் பகுப்பாய்வு
- முந்தைய ஆண்டு வினாத்தாள்கள்
- கேள்விகள்/பதில் எழுதும் நடைமுறைகள்
- வரையறுக்கப்பட்ட தொகுதி அளவு

UPSC CSE தேர்வில் பல சராசரி IAS ஆர்வலர்கள் நல்ல AIR ரேங்க் பெறுகிறார்கள்.

உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். சிவில் சர்வீசஸ் தேர்வுக்கு கடினமாக தயாராவதில் மட்டும் கவனம் செலுத்துங்கள். சேர்ந்து பயன் பெறுங்கள். வாழ்த்துகள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14.06.1951 மறைவு: 27.11.2020

## திரு. S.மோகன் ஆடிட்டர்

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே
தாலாட்டுப் பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே

மனைவி : **தேவி மோகன்**

மகள்கள்: **ஸ்வர்ணா மோகன்** (Austin)
**பிரசாந்தினி மோகன் - சிவநாத்** (LA)

பேரக்குழந்தைகள் : **அஞ்சனா, சஹானா**
**அஸ்வின், கவின்**

**மற்றும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள்**

# சூடி கொடுத்த சுடர்கொடி

தமிழ் மாதங்களில் மார்கழி மாதம் 9–வது மாதமாகும். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது. ஒரு ஆண்டில் 11 மாதங்கள் கோவிலுக்கு போக முடியாதவர்கள் மார்கழி மாதம் மட்டும் கோவிலுக்கு சென்றாலே வருடம் முழுவதும் கோவிலுக்கு சென்ற பலன்கள் கிடைத்து விடும் என்பது ஐதீகம். எல்லா கஷ்டங்களும் நீங்கி, தை மாதத்திலிருந்து புது வாழ்வு கிடைக்க இம்மாதத்தில் பிரார்த்தனை செய்யப்படுகிறது. 'பீடு' (பெருமைகள்) நிறைந்த மாதம் என்பது மருவி 'பீடை' மாதம் என ஆனது. கிருஷ்ண பகவான் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று பகவத்கீதையில் அருளியுள்ளார். மார்கழி மாதம் முழுவதும் இறை–வனை வழிபடுவதால் இம்மாதத்தில் எவ்வித குடும்ப மங்கள விழாக்கள் நடத்தப்படுவதில்லை. இம்மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரமாக கருதப் படுகிறது. இந்த மாதத்தில் அதிகாலை நீராடி ஆலய தரிசனம் செய்வது மிகவும் சிறப்பானது.

## மார்கழி மாதத்தில் நடந்த புராண சிறப்புகள்

மார்கழி மாதத்திற்கு ஏராளமான புராண சிறப்புகள் உள்ளன. மார்கழி மாதத்தில் மகாபாரத யுத்தம் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. மற்றும் ஆண்டாள் திருமாலை திருமணம் புரிந்ததும், திருப்பார் கடல் கடையும்போது கிடைத்த விஷத்தை சிவன் உண்டு உலகை காப்பாற்றியதும், இந்திரனால் பெருமழை உருவானபோது கோகுலத்தில் உள்ள அனைவரையும் காப்பாற்ற கோவர்த்தனகிரி மலையை, கிருக்ஷ்ணர் குடையாகப் பிடித்து காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில் தான். மார்கழி மாத மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த மார்கண்டேயர் மரணத்தை வென்றதாக மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. ஆகையால் ம்ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் மிக சிறந்ததாக கருதப்படுகிறது.

## திருப்பாவை திருவெம்பாவை

வைணவ சமய வழிபாட்டில் ஒன்றறக் கலந்து விட்ட ஒன்று திருப்பாவை பாசுரங்கள் ஆகும். மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலைகளில் திருப்பாவை (முப்பது பாசுரங்கள்) ஆலயங்களிலும், இல்லங்களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு.

தமிழில் புனையப்பெற்ற பாடல்களே ஆயினும், பிற மாநில ஸ்தலங்களிலும், மார்கழி மாதக் காலை வேளைகளில் திருப்பாவை இசைக்கப்படுவது தமிழுக்கும் பெருமை, உள்ளம் உருகப் பாடுவோ ருக்கும் பெருமை.

பாரதத்தின் ஏன் உலகத்தின் பல இடங்களில் எங்கெல்லாம் பெருமாள் அருள்புரிந்து கொண்டிருக்கும் திருக்கோயில்கள் உள்ளனவோ அங்கெல்லாம், கோதை நாச்சியார் தனக்கும் ஒரு தனிச் சன்னதி கொண்டுள்ளது சிறப்பினும் மஹா ஆன்மிகச் சிறப்பு.

ஸ்ரீ வில்லிபுத்தூர் நந்தவனத்தில் ஒரு துளசி செடியின் அடியில் ஆடி மாதம் பூரம் நட்சத்திரத்தில் அவதரித்தார் ஆண்டாள். பூமா தேவியின் அம்சம். சீதையைப்போன்றே ஆண்டாள் பூமியில் பிறந்தவள். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் (விக்ஷ்ணு பகவான்) கோயிலுக்கு அருகிலுள்ள அழகான தோட்டத்தில் ஒரு இளம் பெண் குழந்தையாக ஆண்டாளைக் கண்டெடுத்தார்.

வடபத்ர சாய் மீதான ஆண்டாளின் காதல் தெய்வீக காதல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அவர் பரமாத்மாவைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று இருந்தார். ஆண்டாள் அணிந்தபின்னர் இறைவனுக்கு சூட்டப்பட்ட மாலையை அணிய விருப்பப்பட்ட கண்ணன் இதனை பெரியாழ்வார் கனவில் வந்து கூறியதன் தொடர்ச்சி தான் ஆண்டாள் 'சூடிக்கொடுத்த சுடர்க் கொடி' (அதாவது மாலையை தான் முதலில் அணிந்து பின்னர் கடவுளுக்குக் கொடுத்தவர்) என்ற பெயரைப் பெற்றாள்.

அரங்கநாதனை திருமணம் செய்வதற்காக ஆண்டாள் மார்கழியில் – நோன்பிருந்து பக்தியின் சாரமாக திருப்பாவையும், காதலின் வீரமாக நாச் சியார் திருமொழியையும் பாடினார். தன் தந்தையிடமும் இந்த தெய்வீக திருமணம் பற்றி கூறினார். விக்ஷ்ணு பகவான் பெரியாழ்வாரிடம் ஸ்ரீரங்கம் கோவிலில் வைத்து தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கூறினார்.

ஆழ்வாரும் ஆண்டாளை பல்லக்கில் ஏற்றி வந்தார். இந்த சுபச்செய்தியைக் கேள்விப்பட்ட பாண்டிய மன்னன் ஆண்டாள் திருமணத்தை சிறப்பாக நடத்த ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் ஸ்ரீரங்கம் வரை அலங்கரிக்க ஏற்பாடு செய்தார். காவிரியின் தென்கரையில் இறங்கி அங்கிருந்து நடந்து செல்ல ஆண்டாள் விருப்பப்பட்டாள். ஆண்டாள் பாதம் வலிக்குமே என்றெண்ணிய ஸ்ரீரங்கநாதர் அவளை தன் மார்பில் வீற்றிருக்கும்படியாக செய்தார்.

பங்குனி உத்திர நன்நாளில் ஆண்டாள் ரங்கநாதர் திருமணம் சிறப்பாக நடந்தது. திருப்பாவை தினசரி ஒலிக்கும் இடங்களில் சுப செய்திகளுக்குப் பஞ்சம் ஏது? திருப்பாவை பாசுரம் பாடுவோம். பாற்கடலில் பள்ளிகொண்ட நாதனின் அருள் பெற்று உய்வோம்.

எதிரியிடம் கூடப் பழகுங்கள் ஆனால்,
காரியவாதிகளிடம் ஒருபோதும் பழகாதீர்கள்.
உங்களை அலட்சியமாக நினைப்பவர்களை
விட்டு துணிந்து விலகுங்கள்.

**உங்கள் நெடுந்தூர பயணத்தில் உங்களுடன் யார் பயணிக்க வேண்டும், யாருடன் நீங்கள் பயணிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க சில தோல்விகளும் தேவை தான்.**

# திருவண்ணாமலையில் தீபத்திருவிழா



தீப திருநகராம் திருவண்ணாமலையில், அருள்மிகு அண்ணாமலையார் சமேத உண்ணாமுலையம்மனின் புராணத்தை மக்கள் மறவாமல் இருப்பதற்கும், அனைவரும் அதன் மூலம் இறையருள் பெற்று மெய்நிலை அடைவதற்கு கார்த்திகை மாதம் பரணி நட்சத்திரத்தன்று மலை யின் மேல் ஜோதி தரிசனம் என்னும் ஞானத்தை தன்னுள் உணர்வதற்கு கொண்டாடப்படுவதே தீப திருவிழா.

பஞ்சபூதங்களில் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றில் உள்ள நெருப்பு என்னும் தலமாக திருவண்ணாமலை போற்றப்படுகிறது. அதனால்தான் நெருப்பின் தன்மை உடைய தீபத்திருவிழா புறத்தில் போற்றப்படுகிறது. புறத்தில் விழாவினை கொண்டாடும்போது அகத்திலும் நம்மிடையே உள்ள அக இருளும் அகல வேண்டும் என்ற நினைவு மக்களிடையே விழிப்பு ஏற்படும் தத்துவத்தின் அடிப்படையில் இந்நகரத்தில் எழுந்தருளியிருக்கும் புராதானமான மலையாகிய திரு அண்ணாமலையின் மலையில் தீபத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

தென் இந்தியாவில் திரு அண்ணாமலை தளத்திற்கு மிகபெரிய பெருமை உண்டு. அது என்னவென்றால், “கைலாயம்” இறைவனின் இருப்பிடம். ஆனால் இத்தலத்து மலையே சிவன் ஆவார் என்று புராண பாடல்களில் பாடல் இடம் பெற்றுள்ளது. தீபத்திருநாளன்று காலையில் நடக்கும் நிகழ்ச்சியில் பரணி தீபம் நம் உடலில் ஐம்பூதங்களும் ஐந்து வகையாகி பின் பிறப்பு, இறப்பில் பரம்பொருளிடம் ஓர் பொருளாக மாறுகிறோம் என்பதனையே ஏகன், அனேகன் என்ற இயற்கை தத்துவத்தை விளக்கும் விழாவாக தீபத்திருவிழா புறத்தில் புறச்சடங்குகள் மூலமாக அகத்தில் நடக்கும் மெய்ச்செயலை வெளிப்படுத்து வதுடன், மெய்செயலை மறவாமல் இருப்பதற்கும் கொண்டாடப்படுவதே தீபத்திருவிழா.

அன்று ஓர் நாள் மட்டும் தான் இந்த ஆலயத்தில் “அர்த்தநாரீஸ்வரர்” என்ற இறைவன் சிவசக்தி உருவத்தில் பஞ்சமூர்த்திகளுக்கு காட்சி தருவதற் காக மாலையில் நடக்கும் நிகழ்ச்சியில் தரிசனம் கொடுப்பார். அந்த அர்த்தநாரீஸ்வரரின் தரிசனம், சிவசக்தி என்னும் ஒளி, ஒலி என்ற கோட்பாட்டின் படி நம் முன்னே இயங்கும் அறிவியலின் கருத்தான (ஒலி, ஒளி) என்பதை நம் முன்னே காணும் போது மெய்யான செயலை அறிந்ததன் காரணமாக அகத்தில் இருளாகிய மாயையிலிருந்து விலகி அகத்தில் மெய்யை அறிந்தபின் அறிவாகிய ஜோதியால் அடைய முடியும் என்பதை உணர்த்துவதே ஜோதி தரிசனமும், தீபதரிசனமும்.

– தகவல் : திரு.எஸ்.ஆர் முத்துகிருஷ்ணன்
திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ்.

# நான்கு வகையான மனிதர்கள்

கோடிக்கணக்கான மக்கள் தொகை உலக அளவில் இருந்தாலும், ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான மனோபாவம் பழக்கவழக்கங்கள் இருக்க வாய்ப்புள்ளது.

ஒவ்வொருவருடன் பழகும்போது அவர்களின் பழகும் வகையைப் பார்த்து மனிதர்களை நான்கு வகையாக பிரிக்கலாம். அவர்களைப் பற்றி பார்ப்போம்.

**1. முதல் வகை**

★ எதிர்பார்த்தது எதுவோ அதற்காகவே பழகுவார்கள்.
★ கிடைத்ததும் சென்றுவிடுபவர்கள்.
★ மீண்டும் தேவைப்படும்போது வருவார்கள்.
★ 100% சுயநலவாதிகள் இவர்கள்.

**2. இரண்டாவது வகை**

★ பலனை அடைவதற்காக சில நன்மையைச் செய்வார்கள்.
★ இப்படிப்பட்டவர்கள் கொடுப்பதற்கும் வாங்குவதற் கும் சரியாக இருக்கும்.
★ அவரின் காரியத்தை நிறைவேற்ற நமக்கும் சில காரியம் செய்வார்கள்.
★ இப்படிப்பட்டவர்களிடம் தாராளமாக பழகலாம்.
★ ஆனால்... இவர்கள் அனைவரிடமும் இப்படி பழக மாட்டார்கள்.

**3. மூன்றாவது வகை மனிதன்**

★ பலனை எதிர்பார்க்கவே மாட்டார்கள்.
★ அவர்களாகவே அனைத்தையும் செய்வார்கள்.
★ “எதற்காக செய்கிறீர்கள்?” என்றால் “நான் செய்யாமல் வேறு யார் செய்வார்கள்?” என்பார்கள்.
★ அவர்கள் அன்பால் உங்களை திணறடிப்பார்கள்.
★ இப்படிப்பட்டவர்களால் தான் நம் சமுதாயம் செழிக்கிறது.
★ இப்படிப்பட்டவர்களை உறவினராக, நண்பனாக வைத்திருக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

**4. நான்காவது வகை மனிதன்**

★ யாருடனும் அதிக பழக்கம் இருக்காது.
★ ஆனால் அன்பு மிகுதியாக இருக்கும்.
★ அறிவும் அப்படியே... மிகுதியாக இருக்கும்.
★ அன்பு செலுத்த தெரியாது.
★ இவர்களிடம் நாம் கேட்டால் பலன் அடையலாம்.
★ இவர்களிடம் பழகுவதற்கு “தவம்” செய்திருக்க வேண்டும்.

இந்த வகையான மக்கள் தான் பொதுவாக உலகில் இருப்பார்கள். இவர்களை நாம் இனம் கண்டு பழகும்போது உண்மையான நல்ல நட்பு கிடைக்கும்.

# கேன்சர் வரும் ஆபத்து!..




மிகவும் சூடாக குடிப்பதால் உணவுக்குழாய் கேன்சர் வரும் ஆபத்து அதிகமாக இருக்கிறது என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவை சர்வதேச நிபுணர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

காபி டீ மற்றும் சில வகை பானங்களை சூடாக சாப்பிடுவதை பலரும் விரும்புகின்றனர்.

சிலர்தான் நன்றாக சூடு ஆறிய பின் குடிக்கும் பழக்கம் கொண்டுள்ளனர். இது வகையில் உடலுக்கு மிகவும் நல்லது என்று தெரிகிறது.

தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட்டில் தான் காபி குடிக்கும் பழக்கம் பரவலாக உள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எடுத்துக் கொண்டால் எவருமே டீ குடிப்பதை தான் விரும்புகின்றனர்.

அதிக சூடாக குடிப்பதால் ஏற்படும் உடல் கோளாறு பற்றி கடந்த சில ஆண்டாக மேற்கொண்டு வந்த ஆய்வில் இந்திய நிபுணர்கள் ஆபத்தான சில உண்மைகளை கண்டு பிடித்துள்ளனர்.

**ஆய்வு முடிவுகளில் அவர்கள் கூறியிருக்கும் சில தகவல்கள்:**

வாய் முதல் இரைப்பை வரை உள்ள உணவுக்குழாய் மிகவும் மிருதுவானது குறிப்பிட்ட அளவில் தான் சூட்டை அது தாங்கும். அதிகமானால் அதன் சுவர் அரிக்கத் துவங்கிவிடும்

அதிகமான சூட்டுடன் டீ குடித்தால் உணவுக் குழாய் சுவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. அதன் சுவர்கள் அரிக்கப்பட்டு திசுக்கள் பலவீனம் அடைகின்றன.

இதனால் சுவர்பகுதியில் உணவுக்குழாய் கேன்சர் கட்டி ஏற்படும் ஆபத்து உள்ளது. மற்றவர்களை விட வேண்டாத பழக்கவழக்கங்களை கடைபிடிப்பவர்களுக்கு கேன்சர் ஆபத்து அதிகம்.

பான்பராக் புகையிலை போன்றவற்றை சுவைப்பவர்களுக்கு 1.1 மடங்கு கேன்சர் வாய்ப்பு அதிகம். பீடி குடிப்போருக்கு 1.8 மடங்கு கேன்சர் அபாயம் உள்ளது.

சிகரெட் பிடிப்போருக்கு இரண்டு மடங்கு கேன்சர் அபாயம் உள்ளது. மது குடிப்போருக்கு கேன்சர் அபாயம் 1.8 மடங்கு.

அதிக சூட்டுடன் டீ குடிப்போருக்கு கேன்சர் வரும் வாய்ப்பு இவர்களை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது.

வெயில் பருவத்தை விட குளிர்காலத்தில் குளிர் பிரதேசத்தில் உள்ளவர்கள் சூடாக டீ குடித்தால் அவர்களுக்கு இந்த வாய்ப்பு அதிகம்.

சூடான பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு ஓரளவு பாதிப்பு வாய்ப்பு குறைவு தான்.

இவ்வாறு ஆய்வு முடிவுகளில் தெரிய வந்துள்ளது.

அதிக சூடாக டீ குடித்தால்தான் கேன்சர் வரும் அதிக சூடாக காபி குடித்தால்..? இப்படி காபி குடிப்பவர்களுக்கு கேன்சர் வாய்ப்பு அதிகரித்ததே இல்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.


மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனை நிபுணர்கள் இந்த தகவலை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

டாடா நிபுணர்கள் தங்கள் ஆய்வுக்கு காஷ்மீரில் 1,500 பேரிடம் சர்வே எடுத்துள்ளனர். அவர்களில் அதிக சூடாக டீ குடிப்போருக்கு கேன்சர் ஆபத்து உள்ளதை உறுதி செய்தனர்.

ஆண்டுக்கு இப்படிப்பட்டவர்களிர் சராசரியாக 800 பேருக்கு கேன்சர் வருவதும் தெரியவந்துள்ளது. இவர்களின் ஆய்வு முடிவுகளை சர்வதேச நிபுணர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து வெளி வரும் சர்வதேச கேன்சர் ஆராய்ச்சி இதழ் இன்டர்நேஷனல் கேன்சர் எபிமாடலஜியில் இந்த ஆய்வு முடிவுகள் வெளி வந்துள்ளன.

# கன்னத்தில் கை வைக்காதே




கப்பல் கவிழ்ந்து நீ ஏழையாகிவிட்டாலும் அதற்காக மனம் நொந்து கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்துவிட்டால் போன பணமும், செலவும் திரும்பவா வந்துவிடும் என்று பொருள் கொள்ளத் தோன்றுகின்றது.

ஆனால், இதுவே உண்மையல்ல. இங்கே இவர்கள் குறிப்பிடும் கன்னம் என்பது முகத்தில் உள்ள கன்னம் அல்ல. கன்னக்கோல் என்று சொல்லுகின்ற கன்னம் குறிப்பதாவது அந்தக் காலத்தில் திருடர்கள் கன்னக்கோலைப் பயன்படுத்தி சுவரில் ஓட்டை போட்டு வீடுகளில் திருடுவார்கள். அதாவது உன் சொந்தக் கப்பல் கடலில் மூழ்கி அதனால் உனக்கு பல லட்சங்கள் நஷ்டம் ஏற் பட்டாலும் நீ மீண்டும் உழைத்து தான் சம்பாதிக்க வேண்டமே தவிர, கன்னக்கோல் வைத்து திருடிப் பிழைக்கக் கூடாது என்பதை அறிந்து விளக்குகிறது. ஆக உழைத்து முன்னேற வேண்டும் எந்த ஒரு சூழ்நிலையிலும் திருடிப் பிழைப்பது தவறு என்பதை உணர்த்தும் அருமையான பழமொழி இது.

# OPR MEMORIAL CHARITABLE TRUST

KRT Building 34A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083

Contribution from members for Michaung Cyclone Relief Fund to Affected People

| Sl.No | NAMES | AMOUNT (RS.) |
|---|---|---|
| 1 | Mr.D.Kannabiran, | 10,000 |
| 2 | Mr.Jeeva Ashokan | 3,000 |
| 3 | Mr.S.Aravindan S/o T. Soundararajan | 5,000 |
| 4 | Mr.B.Vinothkumar S/o V.Baskaran | 5,000 |
| 5 | Mrs. Ramya Rajagopal | 10,000 |
| 6 | Mr. S.Mohan | 10,000 |
| 7 | Mr.S.Ravindhra Reddy | 5,000 |
| 8 | Mr.Madhan Selvaraj, Live in Qatar | 5,000 |
| 9 | Mrs. Geetha | 1,000 |
| 10 | Mrs. Lalli Ravichandran | 5,000 |
| 11 | Mr.P.Jayakumar | 5,000 |
| 12 | Mr.Balakrishna Prabu Asst. Commissioner of Police | 5,000 |
| 13 | Woraiyur Reddy Nala Sangham = 5,000<br>Mr.S.Dhanrasu = 1,500<br>Mr.R.Jananayagam = 1,000<br>Mr.C.Thirunyanam = 1,000<br>Mr.C.Ravichandran = 1,500 | 10,000 |
| 14 | Mr.J.Jeganathan | 1,500 |
| 15 | Mr.N.Prabakaran S/o N.T. Thambu | 1,500 |
| 16 | Mrs.Malarselvi Renganathan | 10,000 |
| 17 | Mr.K.Thyagarajan, Teacher | 5,000 |
| 18 | Mr.Kannan | 1,000 |
| 19 | Mr.L.Tamizharasan = 5000<br>Mr.Bhakthavatchalam = 5000<br>Mr.Shyamkumar = 5000<br>Mr.Balachander = 5000 | 20,000 |
| 20 | Vayalur Road Reddy Nala Sangham, Trichy | 10,000 |
| 21 | Mr.Jayaprakasam S/o Arunachalam | 5,000 |
| 22 | Mrs. Anitha Arunkumar | 10,000 |
| 23 | Mr.B.K.Manikandan | 5,000 |
| 24 | Mr.Maniraja | 2,000 |
| 25 | Mr.K.Ramaraju | 5,000 |

| | | |
|---|---|---|
| 26 | Mr.N.Selvaraju | 1,000 |
| 27 | Mr.T.L.Ramarajan | 5,000 |
| 28 | Mr.N.Ravi | 5,000 |
| 29 | Mrs.Bhuvana D/o Ganeshan, | 5,000 |
| 30 | Mr.Dhanush s/o Premalatha Ramesh | 5,000 |
| 31 | Mr.T.J.Ravikrishnan | 1,000 |
| 32 | Mr.J.Suresh | 5,000 |
| 33 | Mr.K.Govindarajan s/o Kaliyamurthy | 1,000 |
| 34 | Mrs.L.Joangrace | 5,000 |
| 35 | Mr.P.Janarthanam | 5,000 |
| 36 | Mr.K.Ramaraju | 7,000 |

**– தொடரும்......**

மேற்காணும் நன்கொடையாளர்களுக்கும், குறைந்த விலையில் தரமான பொருளைக் கொண்டு சுவையான உணவை செய்து கொடுத்த கேட்ரிங் உரிமையாளர் கொளக்காநத்தம் திரு.பாஸ்கர் அவர்களுக்கும், 1,500 பால் பாக்கெட் இலவசமாக வழங்கிய TVH உரிமையாளர் திரு.K.N.ரவிச்சந்திரன் அவர்களுக்கும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

அன்புடன்
V.செல்வராஜு, நிர்வாக அறங்காவலர்
ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, சென்னை
96888 77722

# கிராமத்தானின் புத்திசாலித்தனம்



ஒருவனுடைய எருமை திருடு போய்விட்டது. அவன் நினைத்தான், நமது கிராமத்தில் இருக்கும், நான்கு ஐந்து திருடர்கள் தான் எருமையை திருடியிருக்கனும் என்று.இரண்டொரு நாட்களில் திருடர்கள் திருடின எருமையை சந்தைக்கு கொண்டு போய் விற்று விடுவான்.

அதற்குள் அந்த எருமையை மீட்க ஏதாவது ஒரு யுக்தியை கண்டுபிடிக்கணும் என்று யோசித்த போது ஒரு யுக்தி தோன்றியது. உடனே கிராமத்தில் ஒரு தண்டோரா போட்டான். 'கேளுங்கள் தினமும் 15 படி பால் கறக்கும் என் அருமை எருமை காணாமல் போய்விட்டது. அதை கண்டுபிடித்து கொடுப்பவருக்கு நான் அந்த எருமையை 100 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்வேன்'.

யார் அந்த எருமையை திருடினார்களோ அவன் காதில் இச்செய்தி விழுந்தது. அந்த திருடன் தனக்கு எருமை காட்டில் கிடைத்தது என்று கூறி அதை திருப்பி கொடுத்து பதிலுக்கு இனாமாக கிடைக்கும் 100 ரூபாயை வாங்கிக் கொண்டு வீடு திரும்பனும் என நினைத்துக்கொண்டான். எருமையின் சொந்தக்காரனிடம் சென்று திருப்பி கொடுத்து இனாமை கேட்டான். அதற்கு அந்த கிராமத்தான் சொன்னான். 'நான் சொன்ன பேச்சை மீற மாட்டேன். தண்டோராவில் கூறியபடி நான் இந்த எருமையை எடுத்துக் கொண்டு உனக்கு நூறு ரூபாய் இனாம் கொடுக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அந்த எருமையின் கழுத்தில் கட்டியிருக்கும் இரும்பு சங்கிலியை நீ வாங்கிக் கொள்ளனும்' என்றான் கிராமத்தான்.

திருடன் சொன்னான், சரி அதன் விலை என்ன பத்து அல்லது இருபது ரூபாய்தான் இருக்கும். அதை கொடுத்து வாங்கிக்கிறேன் என்றான். கிராமத்தான் சொன்னான், 'சே சே அந்த சங்கிலியின் விலை வெறும் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது ரூபாய் மட்டும் தான்' என்றான். அதைக்கேட்ட திருடன் திடுக்கிட்டு, ஆளை விட்டா போதும் என்று ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

வென்ற பிறகு கிடைக்கும் பாராட்டை விட, வீழ்ந்த பிறகு கிடைக்கும் ஊக்கமே பலருக்கும் தேவைப்படுகிறது.

# சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிட திறப்பு விழா



கடந்த 20.11.2023 அன்று சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிட திறப்பு விழா, எண்.254, ஜி.என்.டி.ரோடு காவாங்கரை, புழல் சென்னை - 66ல் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைவர் திரு.S.சுப்பையா ரெட்டியார் தலைமை வகித்தார். திரு.R.வரதராஜ ரெட்டியார், திரு.R.ராமசாமி ரெட்டியார், திரு.M.P.சோலையப்பன், திரு.S.சீனி (எ) ராமசாமி, திரு.M.கிருஷ்ணசாமி, திரு.P.செல்வராஜ், திரு.T.பொன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திரு. S.சுப்பையா ரெட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.



K.R.கல்வி நிறுவனங்கள் தலைவர் கல்வித் தந்தை திரு.K.R.அருணாச்சலம் அவர்கள் கட்டிடத்தை திறந்து வைத்தார். முதல் தளத்தை சென்னை மண்டலத்தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டியார் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். சிறப்பு அழைப்பாளர்களாக பலரும் கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.



நிகழ்ச்சியை முதலில் திருமதி.ரேவதி சரவண பெருமாள் திருமதி.காளீஸ்வரி செல்வராஜ், திருமதி.ஜெயசாந்தி சீனி, திருமதி.ஜெயலட்சுமி அண்ணாமலை, திருமதி.தமிழ்செல்வி கனகராஜ், திருமதி.ஞானாம்பிகை ராகவேந்திரன், திருமதி.சரஸ்வதி சோலையப்பன், திருமதி.சுப்புலட்சுமி கிருஷ்ணசாமி, திருமதி.ஜெயலட்சுமி கொண்டுசாமி திருமதி.முத்துலட்சுமி பொன்ராஜ் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் திரு.K.அண்ணாமலை, திரு.P.செல்வராஜ், திரு.T.கனகராஜ், திரு.M.P.சோலையப்பன், திரு.சீனி, திரு.T.பாலசுப்பு, திரு.S.கொண்டுசாமி ரெட்டி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழா பேரூரையாற்றி பேசும்போது, “எனக்கு மண்டபத்திறப்பு விழாவிற்கு அழைப்பு விடுக்கும்போதே நிர்வாகிகளிடம் நன்கொடை



தருவது குறித்து எனது விருப்பத்தை தெரிவித்தேன். ஆனால் தலைவர் திரு.S.சுப்பையா ரெட்டியார் நன்கொடையை யாரிடமும் வாங்குவதில்லை என தாம் கொள்கையுடன் இருப்பதாக தெரிவித்தார். எனக்கு இது மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இந்த இடத்தில் நான் மகிழ்ச்சியோடு ஒரு விஷயத்தை பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன். ஒவ்வொரு சங்க நிர்வாகியும், உறுப்பினரும் தனது சொந்த ஊரில் முதலீடாக வேப்பமரம் வளர்த்து நமது சந்ததியினருக்கும், உங்களது பிற்கால பொருளாதாரத்திற்காகவும் மரம் வளர்த்து பயனடைய வேண்டும். விளாத்திக்குளம் சட்டமன்ற தொகுதியில் 1 கோடி மரக்கன்றுகள் நடுவது என்கிற லட்சியத்தின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறேன். இதற்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. வேப்பமரம் மிகுதியாக வெளிநாட்டில் தேவை உடையதாகவும் மருத்துவத்திற்கு மருந்துகள் தயாரிப்பதற்கு தேவை அதிகமாகவும் உள்ளதால் வேப்பமரம் அதிகமாக வளர்த்து பயனடைய வேண்டும்” என அவர் கேட்டுக் கொண்டார்.

விளாத்திகுளம் முன்னாள் தலைவர் திரு.R.V.செல்வக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். KRT கேரியர் அகாடமி நிறுவனர் திரு.V.செல்வராஜ௦, திரு.OSR.உமாமகேஸ்வரி ரகுபதி மத்திய சென்னை மாவட்டத்தலைவர் திரு.P.வேல்முருகன், சென்னை மண்டல செயலாளர் திரு.P.தாமோதரன், புறநகர் மாவட்ட செயலாளர் திரு.K.S.ராஜா, திருப்பதி வாழ் தமிழ் தெலுங்கு ரெட்டி நல சங்க கௌரவத்தலைவர் திரு.S.S.ராமசுப்பா ரெட்டியார், தே.மு.தி.க சென்னை மத்திய மாவட்ட செயலாளர் திரு.S.K.மாறன், தென் சென்னை மாவட்ட தலைவர் திரு.T.கனகராஜ், கோவில்பட்டி வட்டார சங்கத் தலைவர் திரு.S.பாப்புராஜ், திரு.வைகோபெருமாள், தொழிலதிபர் திரு.P.கேசவப்பெருமாள் சென்னை, புறநகர் மாவட்ட செயலாளர் திரு.S.V.ரமணா, பூந்தமல்லி அர்ச்சனா ஸ்வீட்ஸ் திரு.சக்திவேல், தண்டையார்பேட்டை திரு.க.செல்வகுமார் ஆகியோர் கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

சென்னை மண்டலத்தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டியார் அவர்கள் முதல் தளத்தை திறந்து வைத்து பேசும் போது, “இந்த மண்டபம் நமது சமுதாயத்திற்கு ஓர் அடையாளமாக திகழ்கிறது. ஆந்திரா எல்லையில் அமைந்துள்ள இந்த மண்டபம் நம் மக்களின் ஒற்றுமை சின்னமாக உள்ளது. இதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபட்ட திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களுக்கும், அவரோடு பணியாற்றிய நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தற்போது சென்னை மண்டலத் தலைவராக பொறுப்பேற்றிருப்பது உங்கள் மீது வைத்திருக்கும் அன்பாலும், பாசத்தாலும், நம்பிக்கையினாலும் தான். நமக்கென்று ஒரு வலுவான தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க அமைப்பு இருக்கிறது. அதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் வரும் பிப்ரவரி 1, 2024 அன்று ஓ.பி.ஆர் அவர்களின் பிறந்தநாளில் தாம்பரம் பகுதியில் நம் ஒற்றுமையை காட்டும் வகையில் ஒரு பெரும் திரளான கூட்டத்தை நடத்த முடிவெடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிகழ்ச்சியில் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.


நிறைவாக சென்னை வாழ் ரெட்டி நல சங்க செயலாளர் திரு.P.A.வரதராஜன் நன்றி கூறி பேசும் போது, “பல்வேறு பணிகளுக்கிடையில் இந்த மண்டபம் உருவாக்குவதில் தீவிரமாக தனது முழு உழைப்பையும் செலுத்திய திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களுக்கு நன்றி. இந்நிகழ்ச்சியில், வடசென்னை வட்டார ரெட்டி ஐக்கிய உறவின் முறை சங்கம், பாடி அண்ணாநகர் கொரட்டூர் ரெட்டி நலச்சங்கம், தென் சென்னை வாழ் ரெட்டி நலச்சங்கம், செங்குன்றம் ரெட்டி நலச்சங்கம், அம்பத்தூர் ரெட்டி நலச்சங்கம், வில்லிவாக்கம் ரெட்டி நலச்சங்கம் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள், சிறப்பு விருந்தினர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

நிறைவாக மதிய விருந்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.





# தலைவர் திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு



நாம் வாழ்கிற காலத்தில் இன்னொருவர் நிகரில்லை உங்களுக்கு என்று ஒரு சங்க போராளி ஒருவரை சொல்ல வேண்டுமென்றால் அது சென்னை வாழ் ரெட்டி நல சங்க அறக்கட்டளை தலைவர் திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களாக மட்டுமே இருக்க முடியும். சாதாரணக்குடும்பத்தில் பிறந்து செயற்கரிய சாதனைகளைச்செய்து காட்ட முடியும் என்பதை உணர்த்திய பெருமகனார் ஆவார்.

தமிழக ரெட்டியார் சமூகத்தில் பல்வேறு பகுதிகளில் பெரியவர்–சிறியவர், பணக்காரர், ஏழை, படித்தவர், பாமரர் என்கிற அத்தனை வேறுபாடு களையும் கடந்து, எந்தவொரு பிரிவினராலும் மாறுபட்ட கருத்து இல்லாமல் நேசிக்கப்படுகின்ற, மதிக்கப்படுகின்ற நேர்மையானவர் ஒருவர் நம்மிடையே வாழ்கிறார் என்றால் அது திரு.S.சுப்பையா ரெட்டியார் ஒருவராக மட்டுமே இருக்க முடியும்.

## திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களின் இளமைக் கால வாழ்க்கை

தமிழகத்தின் தென்கோடியிலுள்ள தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தாலுகா கோவில்குமா ரெட்டியாபுரத்தில் சாதாரண நடுத்தர விவசாயக் குடும்பத்தை சேர்ந்த மறைந்த திரு.சோலையப்ப ரெட்டியார்–மாத்தி அம்மாள் தம்பதிக்கு இளைய புதல்வராக 1953ல் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், இரண்டு சகோதரிகள். கிராம முனிசீப்பாக பணியாற்றியவர் இவரது தந்தை. இவரது தாய் மாத்தி அம்மாள் தெய்வ பக்தி கொண்டவர். நடுநிலை தவறாத தந்தைக்கும், தெய்வப்பக்தி கொண்ட தாய்க்கும் பிறந்த இவர் முருகக்கடவுள் மீது மிகுந்த பக்திக் கொண்டவர். பக்கத்து வீட்டில் வசித்து வந்த லக்கம்மாள் என்பவர் இவருக்கு ஐந்து ரூபாயை கொடுத்து சென்னைக்கு அனுப்பி வைத்தார். நான்காம் வகுப்பு வரை மட்டுமே படித்த இவர் தனது தந்தையின் மறைவிற்கு பின்னர் 9 வயதை நிறைந்திருந்த நிலையில் சென்னை வந்தடைந்தார்.

## திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களின் சுய முன்னேற்றம்

வியாசர்பாடி கணபதி ரெட்டியார் மளிகை கடையில் பணியில் சேர்ந்தார். பின்னர் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்தார். மாத சம்பளத்தில் சேர்த்து வைத்திருந்த ரூ.499/–ஐ முதலீடாக கொண்டு 1969ல் சித்திரை 17–ல் தனது 16வது வயதில் சிறிய பெட்டிக்கடை ஒன்றை தொடங்கினார். சிக்கனம், சேமிப்பு, கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்ற குணங்களை கொண்ட இவர் அடுத்த நிலைக்கு தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டார். சென்னையில் வாழ்ந்த தென் பகுதியைச் சேர்ந்த தனது உறவுகளால் 'சென்னை வாழ் ரெட்டி உறவின் முறை சங்கம்' 1974ல் தொடங்கப்பட்டது. அதில் தன்னை அடிப்படை உறுப்பினராக இணைத்துக்கொண்டார்.

## இல்லற வாழ்க்கை

திரு.S.சுப்பையாரெட்டியார் அவர்கள் தனது 20 ஆவது வயதில் 1983ல் பொன்னுத்தாய் என்பவரை இல்லற வாழ்க்கையில் துணையாக்கிக் கொண்டார். விட்டுக் கொடுத்துப் போவதுதான் வாழ்க்கை என்ற கொள்கையை கொண்டவர். இரு உடல்கள் இணைவது மட்டுமல்ல வாழ்க்கை, இரு மனங்கள் சேர்வது அத்துடன் இரு குடும்பங்கள் சேருவது தான் இல்வாழ்க்கை என்பதை புரிந்து வாழ்ந்த இத்தம்பதியினருக்கு சுரேஷ் என்கிற மகனும், ரேவதி என்கிற மகளும் உள்ளனர். இவர் வியாசர் பாடியில்



‘ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்வீட் ஸ்டால்’ என்கிற பெயரில் இனிப்பகம் நடத்தி வருகிறார். தொழிலை கண்ணும், கருத்துமாக கவனித்து வரும் இவருக்கு பொதுவாழ்க்கையில் உறுதுணையாக இவரது மனைவி பொன்னுத்தாய் இருப்பது கடவுளின் வரப்பிரசாதம் என இவரது நண்பர்கள் இவரை பாராட்டுகின்றனர்.


**பொதுவாழ்க்கையில் திரு.S.சுப்பையா ரெட்டியார்**

ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் சங்க நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து வந்தார். 1997ல் ஏற்பட்ட ஒரு சில சங்க உறுப்பினர்களின் விரும்பத்தகாத நிகழ்வுகளால் நிர்வாகத்தின் மீது அதிருப்தி கொண்டார். இதனால் அதுவரை இருந்த நிர்வாகிகள் சிலரிடம் அதிருப்தியுடன் இருந்த இவர் தனியே அதனை விரிவுப்படுத்த எண்ணி உறுதியான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதன் காரணமாகவே உருவானதுதான் “சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிடமாகும்”. இதற் கென பல்வேறு வகையிலும் தன்னை முழுமையாக வருத்திக்கொண்டதோடு வைராக்கிய மாக நின்று இந்த பிரமாண்டமான மாளிகையை சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளையின் மூலம் உருவாக்கி யிருக்கிறார். சென்னை–ஆந்திரா தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இதே கட்டிடத்தைப் போன்று சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஒரு திருமண மண்டபம் கட்ட வேண்டும் என்பதே எனது கனவு எனத்தெரிவிக்கும் இவர் உருவாக்கிய அறக்கட்டளையில் தற்போது திரு.K.அண்ணாமலை, துர்கா ஹோட்டல் திரு.P.செல்வராஜ், திரு.M.P.சோலையப்பன், திரு.சீனி (எ) ராமசாமி, பாடி திரு.R.ராமசாமி உள்ளிட்ட நிர்வாகிகளின் உதவியோடு அறக்கட்டளையை நடத்திவருகிறார். சிறந்த செடிகள் விதைகளின்றி வளர்க்கப்படுபவை என்பர். விதைகள் வெடித்து மெல்ல வளர்ந்து வர அவைகளை அனுசரணையாய், கவனமாய் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த திரு.S.சுப்பையா ரெட்டியார் சிறந்த நிர்வாகத்தை உருவாக்கி அதற்கான அறங்காவலர்களை தேர்வு செய்து சிறப்பாக நடத்தி வருகிறார்.

இதன் மூலம் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி, ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்பதே இவரது லட்சியமாக உள்ளது. சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை தலைவர் திரு.S.சுப்பையா ரெட்டியார் அவர்களை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகிறோம்.



# துக்கத்தில் துணை நிற்போம்



சாவு வீட்டில் சாவைத் தவிர அடக்க செலவிற்கு தேவைப்படும் பணமின்மைக்காக ஒருவரும் அழக்கூடாது.

தவறாக எண்ண வேண்டாம். கௌரவ குறைவாக நினைக்கவேண்டாம். குடும்ப உறுப்பினர் ஒருவர் திடீரென இறந்து போகையில் கையில் காசு இல்லாமல் திணறும் அந்த குடும்பத்தின் முக்கிய நபரை கவனித்தது உண்டா?

உண்மையில் பிச்சை எடுக்காத குறையாக அந்த நாள் மாறிவிடும். எளிமையாக பார்த்தாலும் ப்ரீசர் பாக்ஸ், ஆம்புலன்ஸ், ரெண்டு மாலை போட்டு, சுடுகாட்டு செலவு செய்தாலே இன்றைய தேதிக்கு 30, 40 ஆயிரம் இல்லாமல் முடியாது. அப்படி இருக்க உறவொன்று இறந்ததை நினைத்து அழுவதா? சில மணி நேரத்தில் பணம் எப்படி தயார் செய்வது என்ற நெருக்கடியை நினைத்து அழுவதா? கடன் பழக்கமே இல்லாதவர்களைக் கூட அச்சூழல் வட்டிக்கடைக்கும், அடகு கடைக்கும் கொண்டு போய் தள்ளும்.

இந்த விஷயத்தில் முக்கியமான ஒரு கருத்தை எல்லோரும் தயவு செய்து ஏற்கவேண்டும் அல்லது இனி மேலாவது இந்த மரபை ஏற்படுத்த வேண்டும்.

**அப்படி என்ன மரபு?**

இனிமேல் எந்த துக்க வீட்டுக்கு சென்றாலும், யாரும் பூமாலை வாங்கி போடவேண்டாம். தேவையானால் மரியாதைக்கு உதிரி பூ தூவுங்கள் ஏன்? நாம் மாலை வாங்கி போட்ட அடுத்த நிமிடமே அந்த மாலையை வெளியே எடுத்து வந்து ஒரு இடத்தில் மாட்டி விடுவார்கள். அந்த பூ மாலைக்கு ரூ.100, 200, 500, 1000 என செலவு செய்வதை விட இறந்து போன குடும்பத்திற்கு பணமாக கொடுத்தால் அவர்களுக்கு ஈமக்கிரியை செலவுக்கு ஆகும்.

ஏழையோ, பணக்கார குடும்பமோ யாராக இருந்தாலும் ப்ரீசர் பாக்ஸ், மயானம் போக வண்டி செலவு என ஏகப்பட்ட செலவுகள் வந்துவிடும். இருபது வருடங்களுக்கு முன்பு கையால் தான் தூக்கி போவார்கள். ஆனால் இன்று உடலிலும் தெம்பு இல்லை. மனதிலும் தெம்பு இல்லை. மேலும் அத்துடன் பல சடங்கு, சம்பிரதாயங்கள் என பல காரணங்களுக்காக நெருக்கடி சூழல் உருவாகிறது.

திருமண வீடுகளில் மொய் எழுதும் பழக்கம் நாம் அறிந்த ஒன்று தான். 'ஏதோ கடன உடன வாங்கி கல்யாணம் பண்றான். நாம எழுதுற மொய் பணம் கொஞ்சம் அவனுக்கு உதவியா இருக்குமே' என்பதால் தான் இந்த மொய் பழக்கம்.

கல்யாணம் என்பது திடீர் செலவு இல்லை. நம்ம வசதிக்கு தகுந்த மாதிரி நாள்/மண்டபம் குறிச்சு நம் திட்டப்படி கல்யாணம் நடத்திக்கலாம். ஆனால் கல்யாண வீட்டை விட சாவு வீட்டில தான், மொய் எழுதும் பழக்கம் அவசியம் தேவைப்படுகிறது. இன்றைய விலைவாசி, கால நிலைமைக்கு தேவை. சில ஏரியாக்களில் இந்த பழக்கம் இருக்கலாம். தெரியல? ஆனா பெரும்பாலும் நம்மிடம் இல்லை தானே.

அம்மாவை, அப்பாவை, அண்ணனை, தம்பியை, பிள்ளையை, இழந்த ஒருத்தன் நம் கண்ணு முன்னாடி சாவு செலவுக்கு காசில்லாம அலையலாமா? உண்மையில் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சகமனிதன் ஒருவனின் கரங்களை இறுகப்பற்றி, நாங்க இருக்கோம், தைரியமா இருங்கள். செலவை நாம் எல்லோரும் பார்த்துக்கலாம்" என சக மனிதனாக, உறவுக் காரனாக நாம் சொல்ல வேண்டிய தருணம் இது.

இதுவரை இல்லாவிட்டாலும், இனி இப்படியொரு பழக்கத்தை துவங்குதல் நல்லது. சாவு வீட்டில் சாவைத்தவிர பணத்திற்காக ஒருத்தனும் அழக்கூடாது. நம் நண்பன் வீடாக இருந்தாலும் சரி. நாம் அனைவரும் மனம் வைத்தால் கண்டிப்பாக ஓர் நல்ல மாற்றம் கிடைக்கும், செய்வோமா? கண்டிப்பாக செய்தே தீர வேண்டும். சாவு வீட்டுக்காரர் தயக்கம் காட்டலாம். சங்க நிர்வாகி ஒருவர் அவருக்காக வசூலித்து அவரிடம் வழங்கலாம். சிறிது காலத்தில் நடைமுறைக்கு வந்து விடும். அதுவே மரபாகிவிடும். தொகை முக்கியம் அல்ல. துக்கத்தில் துணை நிற்கும் மனப்பான்மை தான் முக்கியம்.

ஜீவாத்மாவாகிய நாம், வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தவிர நாம் வேறு எதையும் செய்து காட்ட முடியாது.

புறம் பேசுவது எவ்வளவு தவறோ அந்த அளவுக்கு பிறர் புறம் பேசும் போது அதனை கேட்க அமைதி காப்பது கூட தவறானது. காலத்தின் கணக்கில் இதற்கும் நாம் பதில் அளிக்க வேண்டும்.

**கடவுள் அருளால் பெறும் இன்பம், செல்வத்தால் பெறும் இன்பத்தைவிட சாலச்சிறந்தது. பிறருக்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடன் தருபவன். அவர் இருமடங்காய் தருவார். கைம்மாறு கருதி தானம் செய்யாதிருக்கட்டும். தானே உழைத்து தேடிய செல்வம் குறைவாக இருந்தாலும், தன்னால் இயன்றதைத் தருபவனே தலைசிறந்த தானம் செய்பவன். தானம் தரும்போது அது முதலில் கடவுளின் கைக்குச் சென்று பின்னரே ஏழையின் கைக்குச் செல்கிறது.**

# பிள்ளைகளிடம் ஆரோக்கியமான மனநலத்தை வளர்ப்போம் (IQ, EQ, SQ, AQ)

**மாணவர் பகுதி**

'சென்னை கிண்டி ஐஐடி மாணவர் தற்கொலை' சமீபத்தில் வந்த பத்திரிகைச்செய்தி. நல்ல அறிவுத்திறன் கொண்டு போட்டித் தேர்வில் வென்று நல்ல கல்லூரியில் சேர்ந்து படித்தவர். இருப்பினும் ஏதோ ஒரு நெருக்கடியை அவரால் சமாளிக்க இயலவில்லை. கட்டுக்கடங்காத கோபம் கொப்பளிக்க பேசி சண்டையை சாதாரணமாக வரவழைப்போரையும் காண்கிறோம். இவர் சிறிய பிரச்சனையை பெரிதாக்குபவர். சமீபத்தில் கேரளாவில் மருத்துவமனை வார்டில் இருந்த நோயாளி ஒருவர் மருத்துவரைக் கத்திரிக்கோலால் குத்திக் கொன்றார். எப்போதும் சிடுசிடுத்துக்கொண்டு ஒதுங்கி தனித்திருக்கும் பெரிய பதவியில் உள்ளோரையும் காண்கின்றோம். இவை எல்லாமே ஆரோக்கியமான மனநலம் இல்லை என்பதையே காட்டுகின்றன.

ஒரு மனிதனின் உடல் மற்றும் உள்ளம் இரண்டும் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே ஆரோக்கியம் முழுமை பெறும். பொதுவாக உடல் நலத்திற்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். ஏனெனில் உடல்நலக்கோளாறினால் தோன்றும் அறிகுறிகள் மற்றும் விளைவுகள் உடனடியாக நாம் எளிதில் அறியக்கூடியவைகளாக உள்ளன. ஆனால் மனநலக்குறைகள் வித்தியாசமானவை. அவற்றின் கூறுகளை அறியக்கூடிய நுண்ணறிவை சாதாரணமாக நாம் பெற்றிருப்பதில்லை. எனினும் உடல்நலத்துடன் மன நலமும் சிறப்பாக இருந்தால் தான் மனிதன் மகிழ்வுடன் வெற்றியாளனாக உலா வர முடியும். எனவே மனநலத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

### மன செயல்பாட்டுக் கூறுகள் :

உளவியல் அறிஞர்கள் மன செயல்பாட்டு அம்சங்களை

1. அறிவுத்திறன் (Intelligence),
2. மனோபாவங்களின் வெளிப்பாடு (Emotional)
3. சமூகத்தில் பழகுதல் (Social)
4. கஷ்டகாலத்தை நிர்வகித்தல் (Adversity management)

என வகைப்படுத்துகின்றனர். இந்த மனச் செயல்பாடுகளை அளவிடுவதற்கான அறிவியல் முறைகளையும் கண்டுபிடித்துள்ளனர். இதனால் ஒரு நபர் மேற்காணும் பண்புகளுக்கான அளவுகோல் களில் (IQ, EQ, SQ, AQ) எங்கிருக்கிறார் என்பதை நாம் அறியமுடியும். இக்குறியீடுகளில் ஒரு சராசரி மனிதனின் அளவு 90 முதல் 110 வரை இருக்கும். ஒருவர் இந்த நான்கு வகை அளவுகோல்களிலும் புள்ளிகள் உயர்ந்திருப்பது மனச்செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதைக் காட்டுகிறது.

### அறிவுத்திறன் குறியீடு (Intelligence Quotient—IQ)

[இது தொடர்பான கட்டுரை 2022 அக்டோபர் மாத ரெட்டி மலர் இதழில் வெளிவந்துள்ளது]. அறிவுத் திறன் பண்பில் ஒருவருடைய புரிந்து கொள்ளும் திறன், காரணம் அறியும் திறன், காரண காரிய தொடர்பு அறியும் திறன், பிரச்சனைக்கு தீர்வு காணும் திறன் போன்றவைகள் உள்ளன. இவ்வறிவுத் திறன்களை எளிய சோதனைகள் மூலம் அளவீடு செய்யலாம்.

இக்குறியீட்டில் 160-180 புள்ளிகளுடன் உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் சிறந்த அறிவாளிகள். முன்னாள் முதலமைச்சர்கள் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர்கள் அதிக IQ உள்ளவர்கள். அதனால் தான் உயர்படிப்புகள் இல்லாவிடினும் மெத்த படித்தவர்களையும் தங்களது கட்டுப்பாட்டிற்கு கீழ் முழுமையாக கொண்டு வர முடிந்தது.




குடும்பத்திலும் கணவன், மனைவி இடையே அதிக IQ உள்ளவரின் கருத்து மேலோங்க முற்படும். முன்னேறிய நாடுகளில் குழந்தைகளை IQ தேர்வுகளுக்கு உட்படுத்தி அதன் அடிப்படையில் தேர்வு செய்து பள்ளிகளில் சேர்க்கை தருகின்றனர்.

அதிக IQ உள்ளவர்கள் நேர்வழியில் செல்லாமல் எதிர்மறையாக செல்லும்போது, சமூகத்தில் பெரிய கிரிமினல்களாக மாறக்கூடிய அபாயம் உள்ளது. எனவே அதிக IQ உள்ள குழந்தைகளை கவனத்துடன் வளர்ப்பது அவசியம்.

### மனோபாவங்களின் வெளிப்பாடு குறியீடு (Emotional Quotient - EQ)

மனோபாவங்களின் வெளிப்பாடு என்பது ஒருவரிடம் பல சந்தர்ப்பங்களில் தோன்றும் கோபம், ஆத்திரம், அழுகை, மனம் நெகிழ்தல், மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தல் போன்ற உணர்ச்சிகளைக் குறிக்கும். இவ்வுணர்ச்சிகளைச் சூழலுக்கு ஏற்ப புரிந்து கொண்டு கட்டுப்படுத்தி எவ்வழிகளில் ஒருவர் வெளிப்படுத்துகிறார் என்பதனை இக்குறியீட்டில் அளவீடு செய்யலாம்.

அதாவது பிறருடன் பொறுப்புடனும் நேர்மையுடனும் அத்துமீறாமல் அமைதியை பராமரிக்க வெளிப்படுத்தப்படும் மனோபாவ திறன்கள் அளவிடப்படுகின்றன. உணர்ச்சிகளின் எல்லைக்குச் சென்று வெடிப்பவர்கள் குறியீட்டில் சராசரிக்கு குறைவாகவும், எதையும் நிதானமாக அணுகுபவர்கள் சராசரிக்கு அதிகமாகவும் நிலை கொள்வார்கள்.

மனோபாவங்களின் பண்பட்ட, பக்குவமான வெளிப்பாடு குடும்பத்தில் அமைதி நிலவிட அவசியமான ஒன்று. கூட்டுக்குடும்பம் வாழ்க்கை சிதைந்து தனிக்குடும்பமாக வாழும்இன்றைய அவசர உலகத்தில் இப்பண்பு மிக அத்தியாவசியமானது. மனோபாவங்களின் பண்பட்ட வெளிப்பாட்டால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் அதிகமாகி சச்சரவுகள் குறையும்.

### சமூகத்தில் பழகுதல் குறியீடு (Social Quotient - SQ)

சமூகத்தில் பழகுதல் என்பது தன்னைச்சுற்றி உள்ளவர்களிடம் நட்பினை உருவாக்கும் திறன் மற்றும் அதனை நெடுங்காலம் பராமரிக்கும் திறன்களாகும். பிறருடைய கஷ்டநிலையை எளிதில் புரிந்து கொள்ளுதல், அடுத்து அவர்களின் நலனில் அக்கறைகாட்டுதல் திறன்களும் இவற்றுடன் அடங்கும்.

விலங்குகளை போல் அல்லாமல் மனிதன் ஒரு சமூக அமைப்பில் வாழ்பவன். பலரோடு பழகுவது அவசியம். இதனால் பரஸ்பர உதவிகள் கிடைக்கும். அன்றாட வாழ்வில் சுமை குறைந்து சுகமாகும். ஒரு சிலர் உதாரணமாக, சங்கத்தலைவர்கள் சமூகத்தில் நன்கு பழகி ஒரு நட்பு வளையத்துடன் வலம் வருவதை நாம் பார்க்கிறோம். இவர்கள் இக்குறியீட்டில் அதிக புள்ளிகள் பெற்றிருப்பார்கள்.

EQ, SQகளில் மிகக் குறைந்தும் அதே சமயம் IQவில் உயர்ந்த புள்ளிகள் பெற்றிருந்தாலும் இவர்களை விட EQ, SQகளில் உயர்ந்த புள்ளிகள் பெற்றவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் பெறுவார்கள். பின்னாளில் முன்னவர்கள் பணியாளர்களாவதையும் பின்னவர்கள் முதலாளிகளாவதையும் காணலாம். இன்றைக்கு பள்ளிகளில் IQ முன்னேற்றத்திற்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுவது பரிதாபத்துக்குரியது. EQ ஒருவரின் பண்பையும், SQ ஒருவர் பிரபலமாவதையும் பிரதிபலிப்பதால் மாணவர்களிடையே இவைகளின் வளர்ச்சியிலும் பள்ளிகள் அக்கறை காட்டுதல் அவசியம்.

இன்றைய வேகமான, போட்டி மிகுந்த, மன அழுத்தம் நிறைந்த உலகில் மாணவர்களும் பதட்டம் அடைவது, தன்னம்பிக்கை இழப்பது போன்றவற்றை சந்திக்கின்றனர். பள்ளிகளில் சமூக மற்றும் உணர்ச்சி பண்புகளை ஒழுங்குப்படுத்துவதற்கான (Social and Emotional Learning - SEL) பயிற்சிகள் அளிக்கும் போது நல்ல நண்பர்களைத் தேர்வு செய்தல் மற்றும் படிப்பில் நல்ல முன்னேற்றம் பெறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. யோகா, தியானம், ஆழ்மூச்சு பயிற்சி, மனநிறைவு பயிற்சி போன்றவைகளும் இவற்றில் அடங்கும். இதனால் பிற்காலத்தில் நல்ல குடிமக்களாக மாறுவர்.

### நெருக்கடி கால மேலாண்மை குறியீடு (Adversity management Quotient- AQ)

வாழ்க்கையின் கஷ்டமான சூழல்களில் தாக்குப்பிடித்தல் மற்றும் அச்சூழல்களில் தன் மனநிலையை இழக்காது இருத்தல் ஆகியவற்றுக்கான அடிப்படை பண்புகள் இக்குறியீட்டில் அளக்கப்படுகின்றன. இப்பண்புகளில் உயர்ந்து இருப்போர் பிற்காலத்தில் எத்தகைய மோசமான சூழ்நிலையின் போதும் மனம் தளராது தன்னை இழப்பதோ தன் குடும்பத்தை விட்டு விலகுவதோ அல்லது தற்கொலை போன்ற நிலைகளுக்கு செல்ல மாட்டார்கள். வாழ்வில் நெருக்கடி மேலாண்மை திறன் மிக அவசியம்.

### பெற்றோரின் பங்கு

பிள்ளைகளை நாம் வளர்க்கும் போது வேலை வாய்ப்பிற்கான கல்வி அளிப்பது மட்டுமின்றி மேற்காணும் வாழ்க்கைப்பண்புகளில் அனுபவக்குறலுக்கு துணை போக வேண்டும்.

அறிவுத்திறன் (IQ) மரபுப்பண்புகளால் வழி நடத்தப்படுகிறது. எனினும் இது குறைவாக காணப்படின் ஒரு காரியத்திற்குரிய உயர் அறிவினை முயற்சியால் வளர்த்துக் கொள்ள முடியும். இதர EQ, SQ, AQகளில் வளரும் பிள்ளைகளுக்கு நாம் அளிக்கும் பயிற்சி மற்றும் அனுபவ அறிவின் மூலம் உயர்நிலையை அடைய முடியும். சந்தர்ப்பங்கள் வரும்போது அல்லது சந்தர்ப்பங்களை உருவாக்கி பிள்ளைகளை அவற்றில் உட்படுத்தலாம். உடல் உழைப்பு காரியங்களில் ஆட்படுத்தலாம்.

பிள்ளைகளுக்கு நாம் வழங்கும் வீடு, மனை, நிலம், நகை போன்றவைகள் மட்டுமே உண்மையான சொத்து அல்ல. அவை நிரந்தரமும் இல்லை. அறிவுத்திறன், மனோபாவங்களின் நிர்வாகம், சமூகத்தில் இசைந்து வாழ்தல், நெருக்கடி கால மேலாண்மை போன்றவைகளைப் பற்றிய அறிவே உண்மையான சொத்து. படிப்பு என்பது பணி ஓய்வு வரை தான் பயன் அளிக்கும். ஆனால் இவை சாகும் வரை துணை நின்று நம்மை தலைநிமிர்ந்து வாழ வைக்கும்.

வேலைக்கான கல்வியைப் படித்திடுவோம்.
வாழ்க்கைக் கல்வியைக் கற்றிடுவோம்.

R.இராஜசேகரன், விழுப்புரம்.

## ஞானம் எப்போது வேண்டுமானாலும் வரலாம்

யார் எப்படி அவமானப்படுத்தினாலும் கோபமே வராது அந்த துறவிக்கு. அந்த ரகசியத்தை அறிந்து கொள்வதில் ஒரு சிக்ஷயருக்கு ஆர்வம்.

துறவி விளக்கினார். ஒரு ஏரியில் காலியான படகில் அமர்ந்து தியானம் செய்வது என் வழக்கம். அப்படி ஒரு முறை தியானத்தில் இருந்தபோது நான் அமர்ந்திருந்த படகை வந்து முட்டியது இன்னொரு படகு.

இப்படி அஜாக்கிரதையாக முட்டவிட்டது யார்? என்று கோபமாகக் கண்களைத் திறந்து பார்த்தால் அது வெற்றுப் படகு காற்றுக்கு அசைந்து அசைந்து வந்து மோதியிருக்கிறது.

என் கோபத்தினை அந்த வெற்றுப்படகிடம் காட்டி என்ன பயன்? யாராவது என்னைக் கோபப்படுத்தும் போது இது தான் நினைவுக்கு வரும். இதுவும் வெற்று



படகுதான் என்று அமைதியாகி விடுவேன்.

ஞானம் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் வரலாம்.




உங்களுடைய தோட்டத்தை ஆர்கானிக் தோட்டமாக மாற்றுவது என்று நீங்கள் முடிவெடுத்து விட்டால், அதிலிருந்து பின்வாங்காதீர்கள்! உங்களுடைய தோட்டத்தை வேதிப்பொருட்களற்ற ஓர் ஆர்கானிக் தோட்டமாக மாற்றுகிறீர்கள் என்றால், இந்த பூமிக்கோளத்தின் சிறய பகுதியை நீங்கள் பாதுகாக்கிறீர்கள் என்றே அர்த்தம்.

தோட்டக்கலை நிபுணரைப்போல ஒரு பெரிய பூந்தோட்டத்தையே நீங்கள் வைத்திருக்கிறீர்களா அல்லது காய்களுக்கும் கனிகளுக்குமாக கொஞ்சம் இடம் ஒதுக்கி பயிரிடுகிறீர்களா என்பதல்ல இங்கு முக்கியம். பூச்சிக்கொல்லி மருந்துகளும் வேதியியல் ரீதியிலான உரங்களும் துளியும் இல்லாமல் தோட்டம் வைப்பதுதான் இங்கு பாராட்டத்தக்கது.

நிலத்தை மாசுபடுத்தாமல், அதை அப்படியே அடுத்தடுத்தத் தலைமுறையினருக்கு விட்டுவைப்பதையே குறிக்கோளாக கொண்டு ஆர்கானிக் தோட்டங்கள் அமைக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசு குறைவதற்கும், ஆரோக்கியத்துக்கும் விலங்கினங்களுக்கும் எதிரியான பூச்சிக்கொல்லிகளைத் தவிர்ப்பதையுமே இது காட்டுகிறது.

ஆர்கானிக் தோட்டங்களை பராமரிக்கும் பலரும், அவர்களது தோட்டத்தில் விளையும் பொருட்கள் அனைத்தும், செயற்கை உரங்கள் போட்டு வளரும் தாவரங்களைவிட சுவை மிகுந்து இருப்பதாக சொல்கிறார்கள். மேலும், ‘ஆர்கானிக் முறையிலான இயற்கையான தோட்டத்தை நிர்வகிக்கக் கற்றுக்கொண்டுவிட்டால், சராசரியான தோட்டத்தைப் போலவேதான் இதையும் பராமரிக்க வேண்டும். என்பது புரிந்துவிடும். தேவையற்ற வேதிப்பொருட்கள் மண்ணில் போடப்படவில்லை என்ற திருப்தியும் தரமான வகையில் தானியங்கள் விளைவதைப் பார்க்கும் பூரிப்பும், நிச்சயம் கிடைக்கும்’ என்கிறார்கள்.

வேதிப்பொருட்களும் பூச்சிக்கொல்லிகளும், ஆரம்பத்தில் வேண்டுமானல் உடனடி பலன் தரலாம். ஆனால், கொஞ்ச காலத்திலேயே, தாவரங்களின் பூச்சிகள், தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லிகளுக்கு பழகிவிட, பூச்சிகளை அழிப்பது இல்லாமல் போய்விடும். பலன் அளிக்கும் பல பூச்சி யினங்களையும் சேர்த்து இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துகள் கொன்றுவிடும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

### இதனை செயல்படுத்த

ஆர்கானிக் தோட்ட முறைக்கான முதல் பணி உங்களுடைய மண்ணின் தரத்தை கூட்டுவதுதான். பள்ளம் தோண்டியோ அல்லது அப்படியே மேலாகவோ பல இயற்கை சத்துகளைப் பரவவிடலாம். இலைச்சத்து, தழைச்சத்து, தோட்டக் கூட்டுச்சத்து போன்றவை சில உதாரணங்கள். இவ்வாறு செய்தால், கொஞ்ச நாட்களிலேயே மண்ணில் நல்ல மாற்றத்தை நீங்கள் காணலாம். சத்தையும் ஈரப்பசையையும் இந்தப் புதுமண் இறுகப் பற்றிக் கொண்டிருப்பதை உங்களால் பார்க்க முடியும்.

வீட்டிலேயே தயாரிக்கப்படும் உரங்களையும் நீங்கள் அடி உரமாக பயன்படுத்தலாம். முட்டை ஓடுகள், காய்கனிகள் உரித்த தோல்கள், டீ பைகள், காய்ந்த பூக்களின் தலைகள், சில இளைய மரச்சில்லுகள் போன்றவற்றை உரமாக்கிக் கொள்ளலாம். இந்த வகையான பல்வேறு சத்துகளையும் நன்றாகக்கலக்கி கலவையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

களைகளைக்களைய, ரொம்பவும் மெனக்கெட வேண்டாம். சிறு களைகள் வந்தவுடனேயே, அவை பெரிதாவதற்கு முன்னும், விதைகளை தூவி விடுவதற்கு முன்னும் முளையிலேயே கிள்ளியெறிந்து விடுங்கள். கிள்ளப்படும் களைகளை ஓரிரு நாட்கள் அப்படியே வெயிலில் போட்டு வைத்த பிறகு, மண்ணுக்கு உரமாக போடலாம். உங்கள் மண்ணின் வகை என்ன என்பதை அறிந்துகொண்டு, அதற்கு ஏற்றவாறு செடிகளை வாங்குங்கள்.

பூச்சிகள் தாக்காத தோட்டங்கள் கிடையாது. உங்களுடைய தோட்டமும் பூச்சிகளால் தாக்கப் பட்டால், உடனே பூச்சிக்கொல்லிகளைத் தேடி ஓடாதீர்கள். இயற்கையாக அழிக்கப்பாருங்கள். இவைகளை தவளையும் தேரையும் சாப்பிட்டு விடும். சின்னதாக, சிவப்பில் கருப்பு புள்ளிகள் கொண்டிருக்கும் வண்டுகளுக்கு, இலைகளை பாதிக்கும் பச்சை ஈக்கள் என்றால் நா ஊறும். இவை வந்து தங்க, சிறு குட்டைகளையும் பெட்டிகளையும் தயார் நிலையில் வைத்தால், தாவரங்களைத் தாக்கும் பூச்சிகளை அழிக்க இயற்கை வல்லவர்கள் உருவாக்கிவிடுவார்கள்.

பெரிய அளவில் தாவரங்கள் தாக்கப்படாமல் இருக்க அவற்றை அடிக்கடி கவனியுங்கள். இலைச்சுருட்டுப் பூச்சிகளை ஆரம்பத்திலேயே கிள்ளியெறிந்துவிட்டால், தாவரத்தையே இவை விழுங்கிவிடும் அபாயத்தைத் தவிர்த்துவிடலாம். இத்தனையும் மீறி பூச்சித்தொல்லை உங்களுக்கு இருந்தால், உயிரியல் ரீதியிலான மருந்து பொருட்களை வாங்கி பயன்படுத்தலாம்.

காய்கறிகள் பயிரிடுவது என்று முடிவாகி விட்டால், நல்ல வாசனை தரும் தாவரங்களை இடையிடையே நட்டு வையுங்கள். இவை வெளியிடும் சுகந்த மலர்களின் வாசனை, பூச்சிகளைக் குழப்பும் அல்லது அவற்றை தன்பால் ஈர்த்துக் கொள்ளும். மண்ணில் வியாதி பரவாமலிக்க, காய்கறி தாவரங்களின் இடத்தை, ஒவ்வொரு வருடமும் மாற்றிக் கொண்டிருங்கள்.

## கேள்வி–பதில் பகுதி

**கேள்வி : ஆர்கானிக் காய்கறி தோட்டத்தை நான் எங்கு அமைப்பது?**

பதில் : இதற்கு நிறைய சூரிய வெளிச்சம் தேவை. எனவே, தென்கிழக்கு பகுதியே இதற்கு உகந்தது. தண்ணீர் தேங்கி காய், கனி தாவரங்களை அழுகச் செய்யும் பிரதேசமாக இல்லாமல், சமதளம் அவசியம். மிகவும் நெருக்கமாகவும் கூடாது. இடையே நடந்து போக வாய்க்கால் அமைக்க வேண்டும். களை பிடுங்கவும், காய்கள் வந்ததும் அதை பறிக்கவும் இது உதவும்.

**கேள்வி : எனக்கு நேரம் கிடைப்பதே அரிது. ஆர்கானிக் தோட்டத்தை நிர்வகிக்க அதிக நேரம் பிடிக்குமா?**

பதில் : அனைத்து வகையான ஆர்கானிக் தோட்டங்களுக்கும் ஒரு விதி பொருந்தும். அது, ‘வருமுன் காப்போம்’ என்பதுதான். ஆகவே, செடிகளின் மீது கண்களைப் பதித்து ஏதாவது நோய் வந்து விட்டதா என்று கண்காணிக்க உங்களுக்கு நேரம் இருந்தால், அதுவே போதும். ஆர்கானிக் தோட்டம் அமைத்து, அது சுற்றுப் புறச்சூழலுக்கு நல்ல பங்களிப்பைத் தர சில வருடங்கள் ஆகும்.


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

**எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.**
**044 - 2485 3333, 9688877700, E-mail Id : reddymatrimonired@gmail.com**
**For Online Registration Website : www.reddymatrimony.co.in**

நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
[வார விடுமுறை கிடையாது]


இன்றைய தினத்தில் அழகு என்பது அன்பு கொள்ளும் போது மனதிலும் கருணை கொள்ளும் போது கண்களிலும் உதவி செய்யும் போது கைகளிலும் நிமிர்ந்த நடைபயிலும் போது காலிலும் நல்லவற்றை கேட்கும் போது காதுக்கும் ஆரோக்கியத்தை கையாளும் போது உடலுக்கும் புன்னகையை பூக்கும் போது உள்ளத்துக்கு அழகு என்பதை உணர்ந்து வென்றிட எனது பிரார்த்தனைகள்.

# பக்தியுடன் செய்தால் எந்த தொழிலிலும் வெற்றி பெறலாம்

இயற்கை எனும் இறைவனிடம் சரணடைந்தால் வாழ்க்கையில் வெற்றியே. சிறந்தவை மற்றும் மோசமானவை அனைத்தும் நம்மில் உள்ளன. மோசமானது சிலருக்கு சிறந்தது. சிலருக்கு சிறந்தது மற்றொருவருக்கு மோசமானது. இதனால் ஒவ்வொரு விஷயத்துக்கும் அவர்தான் காரணம். அவர்தான் படைப்பாளி. நம்முடைய சிறந்த மற்றும் மோசமான செயல்களிலும் அவர் சாட்சியாளராக அனைவரிடத்திலும் இருக்கிறார்.

இந்த வாழ்க்கையில் நாம் ஒரு சாட்சியாளராக இருக்கும்போது எதுவும் நம்மைத்தொட முடியாது. ஏனெனில், அனுவபமுள்ள சாட்சிகள் எல்லாமே அவரவருக்கானது. பார்வையாளரான நமது மனம் என்னும் கருவியே நம்மை துக்கத்துக்கும், மகிழ்ச்சிக்கும் இட்டுச்செல்லும். அனைத்து (அகம்பாவத்தை) ஈகோவையும் உருவாக்கும். இதனால் நாம் சாட்சிகளாக மாறும்போதுதான் இந்த பிரபஞ்சத்தில் உண்மையான மகிழ்ச்சியான நபராக இருப்போம்.

ஒரு காலகட்டத்தில் புற அறிவு குறிப்பிட்ட தூரம் தான் நம்மை அழைத்துச்செல்லும். அதன்பின் இயற்கையோடு நம்மால் போட்டி போட முடியாது. அப்போது நம் அறிவு இயற்கையிடம் சரணடைந்தே இருக்க வேண்டும். எடுத்துக்காட்டு இன்றைய அறிவியல் வளர்ச்சி அடைந்த உலகில் மனிதனால் இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட கரோனா என்னும் கொடிய நோயை அழிப்பதற்கு எவ்வளவு போராட வேண்டியிருந்தது. அதனால், நாம் படைப்பிடம் சரணடைய வேண்டிய சூழ்நிலையில் இறைபக்தி தெரிந்துக்கொள்ள வைக்கிறது.

சரணடைதல் படைப்பின் படைப்பாளியைத் தொடச்செய்கிறது. படைப்பின் மூலம் படைப்பாளியை தொடும்போது மனிதர்களின் இலக்கு நிரம்பியிருக்கும். ஓர் இலக்கை அடைய படைப்பாளியே (இறைவன்) மனிதனின் வாழ்க்கையில் எல்லா தருணங்களையும் உருவாக்குகிறார். படைப்பாளி எல்லாவற்றிலும் தொடர்பு கொள்ள விரும்புகிறான். ஏனென்றால், பிரபஞ்சத்தில் அறிவானது தற்போது அதிலிருந்து மாயையின் அறிவியல் பிரபஞ்சத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.

விஞ்ஞானம் அறிவின் குழந்தை, இதனால் படைப்பின் உண்மையான குழந்தை ஆன்மிக அறிவியல் என்பதை அறிய இயற்கை நமக்கு உதவுகிறது. உள்ளத்தை தொடும் மனிதர்களுக்கு அவை உள்ளேயும், வெளியேயும் உள்ளது. மனித நேயத்தோடு பார்த்தால் உண்மையான கல்வி, உண்மையான இலக்கை அடைவதற்கான கற்றலாக இருக்கவேண்டும்.

இதனால் இந்த காலத்தில் கல்வி புற அறிவியலை மைய அதன் விளைவு ஒரு கொடிய வைரஸ் (கெரோனா) எனும் நோயை பரப்புகிறது. அவை இயற்கையோடு ஒன்றி வாழும் விலங்குகள், மரங்கள், பறவைகள் இவைகளுக்கு எந்த தீங்கும் விளைவிப்பதில்லை. மாறாக படைப்பின் வழியை விட்டு வெளியேறிய மனிதனை மட்டும் தாக்குகிறது. நாம் உண்மையான பாதைக்கு வரவும். நாம் நமது இலக்கை அடையவும் இயற்கை ஓர் நோய் மூலம் நமக்கு அறிவியல் பாடம் எடுத்து கற்று கொடுத்து உதவியுள்ளது.

"அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்" என்கின்ற பிரபலமான திரைப்பாடல் வரிகளின்படி இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் எந்த தொழிலை இறைபக்தியுடன் செய்தால் வாழ்க்கையில் முன்னேறலாம். அண்ணாமலையார்க்கு 'ஆரோகரா'......

– தகவல் : திரு. ஆகாஷ் முத்துகிருஷ்ணன்.



# ஆன்மீக வழியில் அமைதி




ஆன்மீக குருவானவர் தன்னிடம் சீடனாகச் சேர்வதற்கு விரும்பி வருபவனிடம் உலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் அநித்தியமானவை என்று கூறுகிறார். அவற்றின் மூலம் வரக்கூடிய பெயர், புகழ், பணம், சொத்து போன்றவை அனைத்தும் அநித்தியமானவை என்று விளக்கிக் கூறுகிறார். ஒரு காலத்தில் அவை அனைத்தும் மாறும் அல்லது அழிந்துவிடும். இவையெல்லாம் சீடன் தன்னுடைய மனதில் பதிய வைப்பதற்குரிய அறிவு விவேகம் அவனிடம் சிறிதளவாவது இருக்கிறதா என்பதைக் குருவானவர் அவனை பரிசோதித்து தெரிந்து கொள்வார். இவ்வுலகத்தில் காணப்படும் பொருட்கள் அனைத்தும், அந்த பொருட்களின் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி எல்லாம் காலவரையறைக்குட்பட்டது. அந்தப் பொருட்களின் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து விடும். இதனை அறிந்து கொள்ளுவதே விவேகம் என்னும் ஆன்மீக அறிவு ஆகும்.

நல்லவை, கெட்டவை, இன்பம் துன்பம் கலந்தது தான் வாழ்க்கை. இனிப்பு மட்டும் இருந்தால் வாழ்க்கை திகட்டி விடும் அல்லவா? ஒருவன் குருவிடம் சீடனாகச் சேருவதற்கு விரும்பினான். குரு தன்னிடம் சீடனாக சேருவதற்கு விரும்பியவனிடம் "நீ எனக்கு சீடனாக வேண்டுமானால் இன்று முதல் ஐந்து மாதங்களுக்கு நீ இறை சிந்தனையில்லாமல் நீ கவனமற்று இருக்கும்போதெல்லாம் உன்னை கண்டிக்கும் நோக்குடன் நான் ஒரு குச்சியால் உன்னை அடித்துக் கொண்டே இருப்பேன்.

நான் உன்னை அவ்வாறு அடிக்காமல் இருக்க வேண்டுமானால் நீ எப்போதும் இடைவிடாது இறை சிந்தனையில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அவ்வாறு நான் அடிக்கும் போது நீ விழிப்புணர்வுடன் இருந்து தடுத்து விடும்போது நான் உன்னை அடிக்க மாட்டேன். அதற்குத் தயாரா?" என்று குருசீடனிடம் கேட்டார்.

அதற்கு அந்த சீடன் சம்மதம் தெரிவிக்கிறான். அவன் பகலில் கவனமுடன் இறை சிந்தனையில் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கிறான். ஆனால் அவனால் இரவில் தூங்கும்போது இறை சிந்தனையில் இல்லாதபோது குருவிடமிருந்து குச்சியால் அடிவிழுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

இரவில் தூங்கும்போது குருவிடமிருந்து அடி வாங்குவதை தவிர்ப்பதற்கான வழிமுறைகளைபற்றி சீடன் பலவிதங்களில் யோசித்தான். நாள்தோறும் இரவு நேரத்தில் வழக்கம் போல் தூங்கிக் கொண்டிருந்தான். ஆனால் குரு அவன் அறைக்குள் நுழையும்போது அவனுடைய ஆழ்மனம் ஓரிரு மாதங்களில் விழிப்புணர்வு கொள்வதற்கு ஆரம்பித்தது. குரு அறைக்குள் வருவதை சீடனின் ஆழ்மனம் அவனையும் அறியாமல் அவனுக்கு உணர்த்தியது. அதனால் அவன் குருவின் மூலம் அடிவாங்குவதில் இருந்து தப்பித்துக் கொண்டான். குரு அவனிடம் நீ விழிப்புணர்வு அடைந்துவிட்டாய். இனி நீ என்னுடைய சீடனாக இருக்க தகுதியானவன்" என்று கூறி அவனை சீடனாக ஏற்றுக்கொண்டார். மனித வாழ்வில் ஆழ்மனதை அறிந்து கொள்வதற்குரிய சீடனின் விழிப்புணர்வு போன்று நிச்சயமாக மனிதனுக்கு தேவை என்பதை இந்த குரு சீடன் கதையின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

மனிதன் ஆழ்மனதிடம் கூறுவதை அல்லது கட்டளையிடுவதை மனம் கேட்டுக்கொண்டு தவறாமல் செய்வதை நமது விழிப்புணர்வு மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இதனை நாம் எப்படி தெரிந்து கொள்வது? நாம் தியானம் செய்வதற்கு தினமும் காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் காலை ஐந்து மணிக்கு ஏதோவொரு காரணத்தினால் எழுந்து கொள்வதற்கு முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அதற்கு நாம் இரவு படுக்கப்போகும் போது நமது ஆழ்மனதிடம் "நான் தியானம் செய்வதற்கு காலையில் ஐந்து மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். எனவே மனமே தவறாமல் என்னை ஐந்து மணிக்கு எழுப்பி விடு" என்று ஆழ்மனதிடம் உணர்வுபூர்வமாக கூறிவிட்டு படுத்து நீங்கள் தூங்கி விடுங்கள். காலையில் ஐந்து மணிக்கு அலாரம் அடித்ததுபோல் நமக்கு ஏதொவொரு குரல் ஒலியின் மூலமாகவோ, நாம் காணும் கனவின் மூலமாகவோ நினைவூட்டி நம்மை ஆழ்மனம் தட்டி எழுப்பிவிடும். நமது ஆழ்மனதின் விழிப்புணர்வு காரணமாக காலை ஐந்து மணிக்கு நம்மை அறியாமல் எழுந்து விடுவோம்.

மற்றொரு எளிமையான எடுத்துக்காட்டு பார்க்கலாம். பொதுவாக சிறுவர்கள் தீபாவளியன்று புத்தாடை அணிந்து பட்டாசுகள் வெடிப்பதற்கு விரும்புவார்கள். அன்று தீபாவளி ஞாயிற்றுக்கிழமை. ஒரு சிறுவன் ஞாயிற்றுக்கிழமை என்றால் காலை பத்து மணி வரை எந்தக்கவலையும் இல்லாமல் தூங்குவான். வீட்டில் உள்ள யார் வந்து சிறுவனை எழுப்பினாலும் 'தூக்கம் வருகிறது' என்று எழுந்தவன் மீண்டும் படுத்து தூங்குவதற்கு ஆரம்பித்து விடுவான். அந்தச்சிறுவன் தனது தந்தை வாங்கி வந்த புத்தாடைகளையும் பட்டாசுகளையும் இரவு பார்த்தவுடன் 'நான் காலையில் சீக்கிரம் எழுந்து புதுசட்டை போட்டுக்கொண்டு இந்த பட்டாசு எல்லாம் வெடிக்கவேண்டும்' என்ற ஆசையில் அவனையறியாமல் உணர்வுபூர்வமாக அவன் மனதோடு பேசிக்கொள்கிறான். தீபாவளியன்று அந்தச்சிறுவன் முதல்நாள் இரவில் ஆர்வத்தின் காரணமாக அவனையும் அறியாமல் தன் மனதிற்கு சீக்கிரம் எழுந்துவிடவேண்டும் என்று ஆழ்மனதோடு பேசிவிட்டான். மனிதனுடைய ஆழ்மனது மிகுந்த சக்தி வாய்ந்தது.

ஒவ்வொரு மனிதனும் ஒரு லட்சியத்தை நோக்கிப்பயணம் செய்து கொண்டிருக்கிறான். ஒருவன் பணத்தினை சேர்க்கவும், உயர் பதவியை அடையவும் முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். அவன் அந்த இலட்சியத்தை

அடைந்தவுடன் சிறிது காலத்தில் அவன் அடைந்த பொருளையோ, பதவியையோ அவனை விட்டுப் போன பின் ஒன்று அதனைப் பற்றி நாள்தோறும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பான். அல்லது வேறு ஒரு லட்சியத்தை நோக்கி அவன் பயணித்துக் கொண்டிருப்பான். நாம் சிறுவர்களாக இருக்கும் போது மூன்று சக்கர சிறிய சைக்கிளுக்கு பெற்றோரிடம் அழுது ஆர்ப்பாட்டம் செய்திருப்போம்.

கொஞ்சம் பெரியவனான பின்னர் இருசக்கர சைக்கிள் மீது நாம் ஆசை கொள்வோம். இப்படி மனிதனுடைய வயது ஏறிக்கொண்டு போகும்போது, அவனுடைய ஆசைகளும், இலட்சியங்களும் மாறிக்கொண்டே இருக்கும். அதுபோல்தான் காலம் கடக்கும் போது இந்த உலகில் காணப்படும் பொருள்கள், செயல்பாடுகள் அனைத்தும் அவற்றின் நிலைப்புதன்மையும் மாறிக்கொண்டே இருக்கும். இதனை உணர்வதற்கு நமக்கு ஆன்மீக அறிவு, பக்தி, விவேகம் போன்றவை இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் நாம் ஆன்மீகத்தில் முழு ஈடுபாட்டுடன் செயல்புரிய முடியும்.

ஆன்மீகம் உங்களை பொன்பொருள்களை சம்பாதிக்க வேண்டாம், அதனை அனுபவிக்க வேண்டாம் என்று நமது சாஸ்திரங்கள் இதிகாசங்கள் உபநிடதங்கள் ஒருபோதும் கூறவில்லை. மாறாக இவை 'நீ இந்த உலகில் வாழ்வதற்குத் தேவையான பொன் பொருள்களை, சொத்துக்களை, வசதிவாய்ப்புகளை உடல் உழைப்பினால் மட்டும் நேர்மையான முறைகளில் சம்பாதித்துக் கொள். அதன்மூலம் வரக்கூடிய இன்பங்களை எல்லாம் நன்கு அனுபவித்துக் கொள்' என்று தான் கூறுகிறது. உன்னை உலகில் உள்ள பொருள்களை எல்லாம் வெறுத்து துறவு நிலைக்கு சென்று விடு என்று நமது வேதங்கள், உபநிடதங்கள் இதிகாசங்கள் கூறவில்லை. ஆனால் நீ விரும்பும் அல்லது அடையும் பொருள்களினால் வரக்கூடிய இன்பங்கள் சுகங்கள் எல்லாம் நிரந்தரமானவை அல்ல என்பதை மட்டும் உன் மனதில் நிலை நிறுத்தி கொண்டு உலகில் நீ செயல்புரிய வேண்டும். அவ்வாறு நீ செயலாற்றும் போது மனதில் ஒருவிதமான அமைதி உன்னை அறியாமல் ஏற்பட்டு விடும். அதன்மூலம் உலகில் நீ அமைதியான வாழ்வைப் பெறுவதற்கு முடியும். ஆன்மீகத்தில் கூறப்பட்டுள்ள விவேகத்தின் மூலம் அறிந்து கொண்டு, முயற்சி செய்வதோடு ஆன்மீகப் பயிற்சியை தவறாமல் மேற்கொள்ளவேண்டும்.

மன அமைதியும் ஒருவிதமான ஞானம் ஆகும். மனிதனுக்கு ஞானத்தை அடையவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. அதனை அடைவதற்கு உரிய கருவியினால் தான் முடியும். எடுத்துக்காட்டாக ஒரு மலரை ஒருவர் சிறிது தூரத்தில் வைத்துக்கொண்டு அந்த மலரின் வாசனை என்ன என்று மற்றொருவரிடம் கேட்டால், அவர் கண்ணால் அந்த மலரைப் பார்த்துக் கொண்டு கூறமுடியாது. அந்த மலரை மூக்கினால் நுகர்ந்து பார்த்துதான் வாசனையை கூறமுடியும். அதேபோல் தான் அந்த மலரின் நிறம் என்ன என்பதை மூக்கினால் அறிந்து கொள்ளமுடியாது. அவர் தன் கண்களால் பார்த்துதான் பூவின் நிறம், அமைப்பு, இதழ்கள் எத்தனை என்பது பற்றி கூறமுடியும். அந்த மலரின் பெயர் என்ன என்று கேட்டால் கண்ணாலோ, மூக்கினாலோ கூறமுடியாது வாயினால் தான் கூறமுடியும். மலரின் மென்மையை உணர்வதற்கு வேண்டும் என்றால் அதனை கையினால் தொட்டு உணர்ந்துதான் கூறமுடியும். அதேபோல் தான் ஒரு பொருளின் தன்மையை அறிய வேண்டுமானால் அதனை உணரக்கூடிய கருவியின் மூலமாக தான் அறிய முடியும். நாம் ஞானத்தை அறிய வேண்டுமானால் ஆன்மீக அறிவு என்னும் கருவியின் மூலம்தான் அறியவோ உணரவோ முடியும். ஞானத்தை கொடுக்கக்கூடிய உயர்ந்த கருவிதான் ஆன்மீக அறிவு எனப்படும். இத்தகைய ஆன்மீக அறிவு ஒரு மனிதனிடம் இருந்தால் தான் அவன் தியானம், தவம், பக்தி போன்றவைகளில் ஈடுபடுவதற்கு முடியும்.

சிலபேர் கண்களை மூடிக்கொண்டு தனிமையில் தியானம் இருந்தால் ஞானம் கிடைத்துவிடும் என்று நினைத்துக்கொள்வர். அப்படிச் செய்வதால் நமது குழம்பிய மனதுக்கு தெளிவுகிடைக்கும். அதன்மூலம் தற்காலிகமாக ஒருவிதமான மனஅமைதி கூட கிடைக்கலாம். இந்த உலகத்தைப் பற்றிய நிலையாமைப் பற்றி அறிவு நமக்கு வர வேண்டும். எந்தெந்தக்கருவியைப் பயன் படுத்தினால் இந்த நிலையாமை பற்றி அறிவு கிடைக்கும் என்பது பற்றி சிந்தித்துப்பார்க்க வேண்டும். சாஸ்திரங்கள், இதிகாசங்கள், உபநிடதங்கள் இந்த உலகத்தின் நிலையாமையைப் பற்றி தெளிவாக நமக்கு எடுத்துக்கூறுகிறது. அறிவியல் மூலம் பௌதிகம் படிக்கிறோம் என்றால் அதன் மூலம் ஒரு பொருளின் தன்மைகளைப் பற்றி அறிந்துகொள்ள முடியும். இரசாயனம் பற்றி படித்தால், ஒரு பொருள் மற்றொரு பொருளுடன் கலக்கும்போது அந்தப் பொருளில் ஏற்படும் மாறுதல் தன்மைகளை பற்றி அறிந்து கொள்ளலாம்.

மனிதர்களின் மனநிலை, செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவேண்டுமானால் மனோதத்துவ நூல்கள் மூலம் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. மனிதனுடைய அனுபவத்தின் மூலம் தான் அறிந்து கொள்வதற்கு முடியும். ஆன்மீக ஞானம் இந்த உலகத்தில் உள்ள பொருள்களின் நிலையாமைப்பற்றி தெளிவுப்படுத்துகிறது. இந்த நிலையாமைப்பற்றி தெளிவு பெறும்போது நமக்கு மோட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, இந்த உலகில் காணப்படும் பொருட்களின் மூலம் நமக்கு வரக் கூடிய இன்பத்தை, சுகத்தை அடைவதற்கு இந்த மனம் ஏக்கம் கொள்வதில்லை. இந்த நிலையில்லாத பொருள்களின் மீதும் நமக்கு தீராத ஆசை உண்டாகாது. உலகில் காணும் பொருள்களின்மீது ஆசை இல்லை என்றால் மன அமைதி தானாக நம்மை அடைந்துவிடும். புத்தர் ஆசையே துன்பத்துக்குக்காரணம் என்று போதித்தார். திருமூலர் ஆசைக்கு அணைக்கட்டச் சொல்கிறார்.

**பொன்மொழி**

ஒரு செயலை எப்படி செய்யக் கூடாது என்பதற்கு தோல்விகளே மிகச்சிறந்த பாடம். எனவே சில தோல்விகளும் வாழ்வில் தேவையாக அமைந்துவிடுகிறது.

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE **4962**

# COURSES OFFERED

## UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

## PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA



## NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council (Ministry of Education Initiative) 4 STAR RATING
- nirf Rank - 169
- DST - FIST Sponsored
- Accredited with Grade A NAAC
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA CONSULTANCY SERVICES, ZOHO, Cognizant, accenture, Infosys (Navigate your next), HCL, VVDN Technologies, TESSOLVE (A Hero Electronix Venture), wipro, DATA PATTERNS, MISTRAL (... Partners in Real Time), Brakes India Private Limited, Capgemini, Centizen, ELITE Constructions, embed UR, vuram (Services, Redefined), HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


COURSES OFFERED

**UG**
B.A. - English    B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

**PG**
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# Kayaar Exports Private Limited

KR (Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்



எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7181 | 18.11.1997 | B.E. | திருவாதிரை | —— | —— |
| 2 | G 7182 | 21.10.2001 | B.E. M.B.A. | மூலம் | —— | —— |
| 3 | G 7183 | 15.05.1996 | M.S. | அஸ்வினி | Canada | Canada $60,000/- PA |
| 4 | G 7184 | 30.11.2001 | B.Com. | கிருத்திகை | Private Sector | 18,500/- PM |
| 5 | G 7185 | 25.07.1997 | B.Arch.,M.Arch. | ரேவதி | Studying Australia | —— |
| 6 | G 7186 | 07.11.1997 | B.Com. | அஸ்தம் | Accenture | Rs.10 Lakhs / PA |
| 7 | G 7187 | 06.08.1997 | B.E. M.S. | பூரம் | Software Engineer | —— |
| 8 | G 7188 | 28.11.1996 | B.C.A. | திருவாதிரை | —— | —— |
| 9 | G 7189 | 18.08.1999 | B.Sc., M.Sc., | விசாகம் | —— | —— |
| 10 | G 7190 | 09.09.1999 | M.S. | பூரம் | USA | $ 1 Lakh Dollars / PA |
| 11 | G 7191 | 06.12.1997 | B.E. | அவிட்டம் | CTS | Rs.60,000/- PM |
| 12 | G 7192 | 12.10.1998 | B.Sc., | திருவாதிரை | Staff Nurse | Rs.4 Lakhs / PA |
| 13 | G 7193 (Divorcee) | 04.08.1997 | B.A., MA. B.Ed. | ஆயில்யம் | Private School | Rs.10,000/- PM |
| 14 | G 7194 | 09.01.1994 | M.S. | கேட்டை | Senior Resiliency | —— |
| 15 | G 7195 | 29.12.1994 | MBBS. MD. DM | விசாகம் | Doctor | Rs.1.35 /- PM |
| 16 | G 7196 | 03.05.1996 | M.Sc., | சுவாதி | IT Company | Rs.10 Lakhs / PA |
| 17 | G 7197 | 22.01.2001 | BBA., MBA., | பூராடம் | —— | —— |
| 18 | G 7198 | 14.02.2000 | M.Com. | மிருகசீரிஷம் | Accountant | Rs.20,000/- PM |
| 19 | G 7199 | 29.10.1993 | B.Sc, DSP | ரேவதி | Assistant Police Commissioner | Rs.1.25 /- PM |
| 20 | G 7200 | 19.09.1997 | B.E. | ரேவதி | —— | —— |
| 21 | G 7201 | 15.03.2002 | B.A. LLB. | உத்திரட்டாதி | Law Student | —— |
| 22 | G 7202 | 27.12.1998 | B.Com. MBA. | ரேவதி | Net West, London Bank | Rs.40,000/- PM |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 23 | G 7203 | 05.06.1995 | BCA | மகம் | Cognizant | Rs.14 Lakhs / PA |
| 24 | G 7204 | 04.02.1999 | M.E. | சதயம் | —— | —— |
| 25 | G 7205 | 13.11.1986 | B.E. | உத்திரட்டாதி | Product Manager | Rs.6 Lakhs / PA |
| 26 | G 7206 | 02.08.1998 | B.E. | அனுஷம் | Private Sector | Rs.50,000/- PM |
| 27 | G 7207 | 06.11.1996 | B.Sc., B.Ed., | பூரம் | Teacher | Rs.23,000/- PM |
| 28 | G 7208 | 03.03.1994 | MBBS. MS. DNB | விசாகம் | ENT Surgeon | Rs.12 Lakhs / PA |
| 29 | G 7209 | 24.12.1997 | B.E. M.S. | சித்திரை | Software Engineer | Rs.14 Lakhs / PA |
| 30 | G 7211 | 01.07.1998 | B.E. | அஸ்தம் | Software Engineer | Rs.4.5 Lakhs / PA |
| 31 | G 7212 | 11.05.1997 | B.Arch. | புனர்பூசம் | Architect Own Office | Rs.3 Lakhs/ PA |
| 32 | G 7213 | 29.10.1997 | B.Sc., M.Sc., | அஸ்தம் | TMF Specialist | Rs.4 Lakhs / PA |
| 33 | G 7214 | 04.08.1996 | MBBS, MD | அஸ்வினி | Doctor | —— |
| 34 | G 7215 | 19.08.1999 | B.Com. M.B.A. | அனுஷம் | The Bank of New York | Rs.4.5 Lakhs / PA |
| 35 | G 7216 | 02.05.1998 | B.Com. C.A (Final) | பூசம் | Assistant Manager | Rs.50,000/- PM |
| 36 | G 7218 | 12.05.1995 | M.Sc. | சித்திரை | Private Sector | Rs.25,000/- PM |

## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

தொலைபேசி : ..........................................................................

நான் இத்துடன் ............ வருட சந்தா / 15 வருட சந்தா தொகை ரூ.................... டிடி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**


எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com



**ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 10768 | 12.07.1994 | DEEE | மகம் | Technical Engineer | Rs.50,000/- PM |
| 2 | B 10769 | 22.12.1996 | B.Arch. | கிருத்திகை | Own Architect Office | Rs.4 Lakhs / PA |
| 3 | B 10770 | 19.12.1987 | DEEE, B.E. | கேட்டை | Business & Work | Rs.50,000/- PM |
| 4 | B 10771 (Divorcee) | 30.12.1977 | B.E. | மகம் | Protect Manager | Rs.1 Lakh / PM |
| 5 | B 10772 | 27.05.1985 | B.E. | மகம் | Engineer | Rs.1 Lakh / PM |
| 6 | B 10773 | 01.12.1995 | B.E. | உத்திரட்டாதி | Own-PVC Factory | Rs.1,50,000/- PM |
| 7 | B 10774 | 24.10.1994 | B.Tech., | மிருகசீரிஷம் | Lead Analyst | Rs.25 Lakhs / PA |
| 8 | B 10775 | 27.09.1993 | M.Sc., | அவிட்டம் | I.T. Head | Rs.55,000/- PM |
| 9 | B 10776 | 03.07.1996 | M.Sc., B.Ed. | திருவோணம் | Temporary Teacher | Rs.25,000/- PM |
| 10 | B 10777 (Divorcee) | 26.07.1987 | B.E. | பூசம் | TNEB Junior Engineer | Rs.50,000/- PM |
| 11 | B 10778 | 11.01.1997 | B.E. | திருவோணம் | Flyers Soft Pvt | Rs.60,000/- PM |
| 12 | B 10779 | 24.12.1996 | M.Sc., | மிருகசீரிஷம் | Amazon | Rs.35 Lakhs / PA |
| 13 | B 10780 | 12.09.1992 | B.E. | பூரட்டாதி | Dubai | Rs.12-14 Lakhs / PA |
| 14 | B 10781 | 22.11.1992 | MBA | சித்திரை | Banking Profession | Rs.1.25 Lakhs / PM |
| 15 | B 10782 | 24.01.1987 | B.E. | அனுஷம் | Own Business | Rs.5 Lakhs / PM |
| 16 | B 10783 | 23.12.1990 | B.E., CA, LLB | சதயம் | Canara Bank Manager | Rs.13.20 Lakhs / PA |
| 17 | B 10784 | 03.04.1994 | B.E. | பூராடம் | Own Business | Rs.50,000/-PM |
| 18 | B 10785 | 30.03.1995 | B.Tech., | உத்திரட்டாதி | Senior Analyst | Rs.7.70 Lakhs / PA |
| 19 | B 10786 | 10.11.1993 | B.E. M.Sc., | உத்திரம் | U.K. | Rs.33 Lakhs / PA |
| 20 | B 10787 (Divorcee) | 12.02.1988 | B.Com. PGDM | அனுஷம் | LIC of India | Rs.1.40 Lakhs / PM |
| 21 | B 10788 | 15.11.1993 | B.E. | கேட்டை | Quality Control Manager | Rs.70,000/- PM |
| 22 | B 10789 | 25.10.1996 | B.Tech. | உத்திரட்டாதி | Software Engineer | Rs.22 Lakhs / PA |
| 23 | B 10790 | 10.07.1995 | B.E. | கேட்டை | Senior Associate Engineer | Rs.27.5 Lakhs / PA |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 24 | B 10791 | 30.03.1997 | MBBS. | கேட்டை | Doctor, Own Hospital | Rs.60-70 Lakhs / PA |
| 25 | B 10792 | 21.03.1993 | MBBS., M.D. | சதயம் | Doctor, Govt. Hospital | Rs.70,000/- PM |
| 26 | B 10793 | 11.07.1991 | M.Tech. | திருவாதிரை | Engineer | Rs.12 Lakhs / PA |
| 27 | B 10794 | 08.11.1991 | B.Tech. MBA. | அனுஷம் | Dubai | Rs.3 Lakhs / PM |
| 28 | B 10795 | 16.02.1993 | B.E. MS. | கேட்டை | London | Rs.76 Lakhs / PA |
| 29 | B 10796 | 04.11.1996 | B.E. | ஆயில்யம் | Software Engineer | Rs.40,000/- PM |
| 30 | B 10797 | 13.05.1986 | B.E. | திருவாதிரை | Business | Rs.16 Lakhs / PA |
| 31 | B 10798 | 28.08.1997 | B.E. | திருவாதிரை | Field Officer | Rs.4.50 Lakhs / PA |
| 32 | B 10799 | 09.06.1993 | B.E. MBA | அவிட்டம் | Senior Developer | Rs.11 Lakhs / PA |
| 33 | B 10800 (Divorcee) | 23.02.1991 | Dip.VMC | மிருகசீரிஷம் | Own Business | Rs.1 Lakh / PM |
| 34 | B 10801 | 03.03.1998 | B.Sc. MBA | பரணி | Assistant Manager, Federal Bank | Rs.10 Lakhs / PA |
| 35 | B 10802 | 14.09.1995 | B.E. MBA. | கிருத்திகை | Executive | Rs.40,000/- PM |
| 36 | B 10803 | 16.06.1989 | B.E. M.S. | விசாகம் | Singapore | Rs.6 Lakhs / PA |
| 37 | B 10804 | 06.07.1995 | DTDM | சித்திரை | Own Business | Rs.90,000/- PM |
| 38 | B 10805 | 17.06.1994 | B.E. | உத்திரம் | Executive | Rs. 6 Lakhs / PA |
| 39 | B 10806 | 07.04.1995 | B.E. MBA. | திருவாதிரை | Banking Analyst | Rs.60,000/- PM |
| 40 | B 10807 | 03.08.1989 | B.E. | மகம் | Deputy Manager, | Rs.33,000/- PM |
| 41 | B 10808 | 16.12.1988 | MBA. | உத்திரட்டாதி | Senior Associate | Rs.30,000/- PM |
| 42 | B 10809 | 03.06.1996 | B.Tech. PGDM | மூலம் | Software Professional | Rs.22 Lakhs / PA |
| 43 | B 10810 | 25.11.1993 | B.Tech. | ரேவதி | New Zealand | $ 9,000/- PM |
| 44 | B 10811 | 29.03.1996 | B.E. | அஸ்வினி | Asst.Manager, IDBI Bank | Rs.75,000/- PM |
| 45 | B 10812 | 14.11.1996 | B.E. | மூலம் | Engineer | Rs.30,000/-PM |
| 46 | B 10813 (Divorcee) | 04.01.1986 | 12th | அஸ்தம் | Manager, Agri | Rs.15,000/- PM |
| 47 | B 10814 | 10.10.1995 | B.E. | பரணி | Senior Engineer | Rs.65,000/- PM |
| 48 | B 10815 | 25.04.1994 | B.E. | சித்திரை | Standard Chartered Bank | Rs.7 Lakhs / PA |
| 49 | B 10816 | 28.09.1995 | B.E. | விசாகம் | Supply Chain Executive | Rs.45,000/- PM |
| 50 | B 10817 | 13.07.1996 | MBBS.,M.D. | மிருகசீரிஷம் | Radio Diagnosis, Apollo Hospitals | Rs.1.5 Lakhs/- PM |

# தபால் பெட்டி



கடந்த மாதம் வெளியான திருச்சி, வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்க குடும்ப விழா நிகழ்ச்சியினை கட்டுரையாக வெளியிட்டிருந்தது பாராட்டுக்குரியது. ஒரு நேர்முக வர்ணனை போல அந்த செய்தி வெளியானது மகிழ்ச்சியை தருகிறது. என்னைப்போன்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாதவர்களும் நேரில் கலந்துகொண்ட அனுபவம் கட்டுரையை படித்த போது கிடைத்தது. இந்த நிகழ்வில் முன்னாள் இந்திய வனப்பணி அலுவலர் திரு.வ.சுந்தரராஜ் அவர்கள் எழுதிய நூல் வெளியிட்டது அவருக்கு பாராட்டு தெரிவிக்கலாம். 'வசீகரிக்கும் வனங்களின் உலகம்' என்ற அந்த நூல் வனப்பகுதிகளைப் பற்றிய செய்திகளை தந்ததோடு வனங்களை பராமரிப்பதையும், அதன் அவசியத்தை தெளிவுப்படுத்தியது. நன்றி.

**- திரு.பி.சுந்தர்ராஜ், சென்னை.**

விவசாயப்பகுதியில் வேளாண் கழிவுகளிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்து குறித்த கட்டுரையை வெளியிட்டது மிகவும் அருமை பாராட்டுக்குரியது. வற்றாத ஆற்றல் வளங்களை உபயோகிப்பது மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பாக இருப்பதையும், செலவை குறைப்பதையும் தெரிவித்திருந்தது மகிழ்ச்சியை தருகிறது. திட நிலையில் உபயோகிக்கப்படும் எரிபொருட்கள் பற்றியும், திரவ எரிபொருளான எரிசாராயம், வாயு எரிபொருட்கள், சாண எரிவாயு குறித்தும் அறிந்து கொண்டோம். வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் மூலம் ஆற்றலை உற்பத்தி செய்து தொழிற்சாலைகளுக்கும், வர்த்தக நிறுவனத்திற்கும் வழங்குவதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்கிற சூட்சமத்தை வெளியிட்ட ரெட்டி மலருக்கு நன்றி.

**- திரு.ஆர்.பார்த்திபன், சேலம்.**

காவேரி மருத்துவமனை அறக்கட்டளையின் மூலம் ஓ.பி.ஆர் நினைவு தொண்டு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கப்பட்டு இருக்கும் செய்தி மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நமது ரெட்டியார் சமுதாயத்தினரால் நடத்தப்படும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, காவேரி மருத்துவமனை போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களிடம் நிதியை பெற்று சமூகப்பணிகளை ஆற்றுவது வரவேற்புக்குரியது. இதில் முன்னுதாரணமாக நிதி வழங்கிய காவேரி மருத்துவமனை நிறுவனத்திற்கு பாராட்டுகள். மேலும் பல நிறுவனங்கள் இதுபோன்று நன்கொடை வழங்கினால் கே.ஆர்.டி கேரியர் அகடாமியின் மூலம் பல ஏழை மாணவர்கள் பயன் அடைவார்கள். மற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும். நன்றி.

**- திரு.ஆர்.அன்பழகன், நாமக்கல்.**

முத்துராமலிங்கபுரம் பெயர் உருவான வரலாறு குறித்த செய்தியை ரெட்டி மலர் வெளியிட்டது எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது. இந்த விருது நகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருகே உள்ள முத்துராமலிங்கபுரம் கிராமம் எனது மனைவியின் பிறந்த ஊர் குறித்து வரலாற்று உண்மைகளை அறிந்துகொண்டேன். இந்த கட்டுரையில் வெளியிடப்பட்ட செய்திகள் இன்றைய இளைஞர்கள் அறியும்படி அமைந்திருந்தது. ரெட்டியார்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராகவும், மாமன்னர் முத்துராமலிங்க சேதுபதிக்கு ஆதரவு தெரிவித்த வரலாறையும் அறியும்போது வீரமிக்க இந்த சமுதாயத்தில் பிறந்ததை எண்ணி அனைவரும் பெருமைக்கொள்ள வேண்டும். ரெட்டியார்கள் எந்த சூழ்நிலையிலும் கேட்டு பெறும் சுயநலம் அல்ல என்பதை வரலாறு தெரிவிக்கிறது. இதை ரெட்டிமலரில் படித்த போது எனக்கு மிகுந்த மன நிறைவை தருகிறது. இந்த செய்தியை எனது உறவினர் பி.உலகநாதன் ரெட்டிமலருக்கு தெரிவித்து உலகறிய செய்த செயல் பாராட்டுக்குரியது. நன்றி,

**- திரு.வி.ஆர்.பாலகுரு, மே பிளவர் கார்டன் சென்னை.**

வட சென்னை வட்டார ஐக்கிய உறவின்முறை சங்க தலைவர் திரு.கே.எஸ்.பாலமுருகன் மறைந்த செய்தியை ரெட்டிமலரில் வெளியான கண்ணீர் அஞ்சலி பகுதியை படித்து அதிர்ச்சி அடைந்தேன். அவர் நம் சமுதாய சங்க நிகழ்வுகளில் தவறாது கலந்துகொண்டு ஒவ்வொரு நடவடிக்கையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றியவர். அவர் மறைந்தார் என்ற செய்தி இன்னமும் என்னால் நம்ப முடியாததாக இருக்கிறது. அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய நம் சொந்தங்களுடன் அவர் இணைந்திருந்த வர்த்தக சங்கமும் பெரும் திரளாக கலந்து கொண்டது அவர் எந்த அளவில் மற்றவர்களுடன் தொடர்பில் இருந்தார் என்பதை காட்டுகிறது. ம.தி.மு.கவினுடைய தலைமை செயலாளர் திரு.துரை வையாபுரி மற்றும் தொழில் அதிபர்கள் பலரும் கலந்துகொண்டது, அவர்மீது மற்றவர்கள் காட்டிய அன்பும் அவர் பிறர் இடத்தில் கொண்ட பாசத்தையும் வெளிப்படுத்துகிறது. அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

**- திரு.எஸ்.ரவீந்திர ரெட்டி, நாமக்கல்.**

## அன்பான வாசகர்களே

**தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை ரெட்டி மலர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

# சென்னை வாழ் ரெட்டி நல அறக்கட்டளை கட்டிட திறப்பு விழா







REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : D.MUTHURAMAN.